# கூட்டாட்சியும் தமிழ்நாட்டு உரிமைகள் பறிப்பும்!

தமிழ்நாட்டைக் கழக(சங்க) காலத்தில் சேர சோழ பாண்டிய அரசர்களும் குறுநில மன்னர்களும் ஆண்டனர். அதன்பின் களப்பிரர், பல்லவர், பிற்காலச்சோழர்கள், மறுமலர்ச்சிப் பாண்டியர்கள், விசய நகரத்தார், நாயக்கர், தில்லி முகமதியர், மராத்தியர், மைசூரர் (ஐதர்அலி, திப்புசுல்தான்), பின் ஆங்கிலேயர் ஆண்டனர். இவர்களுள் ஆங்கிலேயர் தவிர்த்து அயலர் எவரும் தமிழ்நாடு முழுவதையும் ஆண்டதில்லை. சிற்சில பகுதிகளிலேயே தம் ஆட்சியைச் செலுத்தினர்.

ஆங்கிலேயரே தமிழ்நாடு முழுமையையும் தம் ஆட்சிப் பொறுப்பில் வைத்திருந்தனர். தமிழ்நாடு உள்ளிட்ட இந்திய நாட்டையும் உருவாக்கினர். இந்தியநாடு 1947–இல் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றதென்றாலும் தென்னாட்டார் சிலர்க்கு அமைச்சுப்பதவி அளித்தனர் என்றாலும் வடவரின் வல்லாண்மையுடனே இந்திய ஒன்றிய அரசின் ஆட்சி நடந்துவருகின்றது.

இந்தியநாடு பல்வேறு மொழி, இனம், பண்பாடு, சமயம், உணவுப் பழக்கம், உடை முதலியவற்றுடன் பன்முகத்தன்மை கொண்டதாகவும், கூட்டாட்சி நெறிமுறைகளைக் கொண்டதாகவும், மாநிலங்களின் ஒன்றியமாகவும் உருவாக்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் இப்போது, மாநில உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டதோடு, மாநில மக்களின் அடிப்படை உரிமைகளையே ஒன்றியஅரசிடம் போராடிப் பெறவேண்டிய நிலையே உள்ளது.

மாநில உரிமைகள் (அதிகாரங்கள்), ஒன்றியஅரசின் உரிமைகள், பொதுப்பட்டியல் உரிமைகள் என இந்தியாவில், முப்பிரிவுகளாக அரசியல்சட்டப்படி உரிமைகள் பிரிக்கப்பட்டிருந்தும் இந்திய ஒன்றிய அரசு, பொதுப்பட்டியலில் உள்ள அதிகார உரிமைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிக்கொண்டு வருகின்றதோடு மாநில உரிமைகளையும் தந்திரமாகப் பறித்துவருகின்றது.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி இந்தியா கூட்டாட்சி நாடாகும். பல நாடுகளின் (மாநிலங்களின்) ஒன்றியம் (Union of States) தான் இந்தியா. ஆனால், அதற்கு மாறாக இந்தியாவை ஒற்றை நாடாக தில்லி ஒன்றிய ஆட்சியாளர் மாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றனவென்றால் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றனவென்றே பொருள். கூட்டாட்சிக் கொள்கை மக்களாட்சியோடு ஒன்றிணைந்ததாகும். மக்களுடைய உரிமைகளும் மாநிலங்களின் உரிமைகளும் சேர்ந்ததே உண்மையான மக்களாட்சியாகும். உலகின் மக்கள்தொகையில் 40 விழுக்காட்டிற்கு மேல் உள்ள மக்கள் வாழும் வெவ்வேறு நாடுகளில், கூட்டாட்சி முறைதான் பின்பற்றப்படுகின்றது.

உலகின் பலநாடுகளிலும் அரசியல், குமுக, பொருளியல், இன, மொழி, பண்பாட்டு வேறுபாடுகளையும், நிதித் தொடர்பான அமைப்புகளையும் அடிப்படையாகக் கொண்டே கூட்டாட்சி முறையின் சிறப்பு அமைகிறது.

செவ்வைக் கூட்டாட்சியியலைப் (classic federalism) பின்பற்றுகின்ற அமெரிக்கா, ஆத்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் மாநிலங்களின் உரிமைகள்தான் அரசமைப்புச் சட்டத்தின் அடித்தளமாக அமைகின்றன. சில முதன்மையான காரணங்களுக்காக அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை மேற்கூறிய கூட்டாட்சி நாடுகளில் மேற்கொள்ளநேரிட்டாலும், ஒருமுறை கூட மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கின்ற அரசமைப்புச் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டதே இல்லை.

இந்தியாவில் மாநில உரிமைகள் தொடர்ந்து 78 ஆண்டுகளாகச் சிதைக்கப்படுகின்றன. இத்தகைய தன்மைகள் பொருந்திய இந்தியாவின் அரசமைப்புச் சட்டம் முழுவதுமாக ஒற்றையாட்சிச் சட்டமாக மாறி வருகிறது. இந்திய ஒன்றிய ஆட்சியாளர்கள் நினைத்தால் மாநிலங்களை நினைத்த நேரத்தில் கலைத்துவிட முடியும்; கவிழ்த்துவிட முடியும் என்னும் நிலையே உள்ளது.

ஒன்றிய அரசு முழு முற்றதிகார (சர்வாதிகார) அரசாக மாறியதற்குப் பேராயக்கட்சியும், பா.ச.க.வும் செய்த, செய்து வருகின்ற மக்களாட்சிக்கு எதிரான, கூட்டாட்சிஇயலுக்கு எதிரான தொடர் சட்டத்திருத்தங்களும், பின்பற்றுகின்ற மேலாண்மை நடவடிக்கைகளும் காரணங்களாக உள்ளன. இந்தியா ஒரு நாடன்று; இது ஒரு துணைக்கண்டம். மேற்குறிப்பிட்ட செவ்வைக் கூட்டாட்சி நாடுகளில் காணமுடியாத வேற்றுமைக்கூறுகள் இத் துணைக் கண்டத்தில்தான் பெருமளவில் உள்ளன என்பது வெள்ளிடைமலையாகும்.

பல்வேறு மத, மொழி, இனமக்கள் மாநிலங்களில் இருப்பதனாலும், பல மாநிலக் கட்சிகள் மாநிலங்களில் ஆட்சியமைப்பதனாலும் ஒன்றியஅரசில் தேசியக்கட்சிகள் தனித்து ஆட்சியமைக்கும் முழுப்பெரும்பான்மையினை இழந்து வருகின்ற நிலையிருப்பினும் நடைமுறையில் இந்திய அரசமைப்புச் சட்டம் ஒற்றையாட்சிச் சட்டமாகவே மாற்றப்பட்டு விட்டது.

தேசவிடுதலைப் போராட்டங்களில் மக்கள் பங்கேற்பும், மொழிவழி மாநிலங்களுக்காகவும், மொழி, இனம், பண்பாடு பாதுகாக்கப் படுவதற்காகவும் பல்வேறு தேசியஇனங்கள் நடத்திய மக்கள்திரள் போராட்டங்களும், கூட்டாட்சிக் கோட்பாடு அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றதற்கு முகன்மையான காரணங்கள் ஆகும்.

2014க்குப் பிறகு ஒன்றியத்தில் பா.ச.க. அரசு அமைந்தவுடன் திட்டமிட்டு மாநில உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. முற்றதிகார (சர்வாதிகார) அரசியலை முன்னிலைப்படுத்துகிற இந்து தேசம் (ராஷ்டிரம்) என்ற தேசியத் தற்பணியர் அமைப்பின் (RSS) செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பா.ச.க. ஆட்சி முயன்று வருகின்றது. இதன் அடிப்படையில்தான் அரசமைப்புச் சட்டம் வழங்கிய தன்னாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் வெட்டப்படுகின்றன.

அரசியல் அமைப்புச் சட்டப்படி தனியதிகாரத்துடன் செயற்படவேண்டிய இந்தியத் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் முழு அளவிற்குப் பா.ச.கட்சியின் செயல்பாடுகளாகவே நடக்கின்றன. தேர்தல் ஆணையரைத் தலைமை அமைச்சர், எதிர்க்கட்சிகளின் தலைவர், உச்சநயன்மன்ற நயனகர் ஆகிய மூவர் குழு தேர்ந்தெடுத்துக் குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைக்க வேண்டும் என்று, 2023–இல் உச்சநயன்மன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், இந்திய ஒன்றிய அரசார், தலைமைஅமைச்சர், எதிர்க்கட்சிகளின் தலைவர், அமைச்சரவையிலுள்ள அமைச்சரொருவர் ஆகிய மூவர் அடங்கிய குழு தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக்கும் என்று சட்டம் இயற்றிக்கொண்டார்கள்.

இனி, எவ்வாறெல்லாம் தமிழ்நாட்டு உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன என்று சில நிலைகளில் சிறிது பார்ப்போம்:

1. **நிலப்பகுதி உரிமை இழப்பு**; மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது, தமிழர்பகுதிகள் ஆந்திரா, கருநாடகா, கேரளாவுடன் இணைக்கப்பட்டுவிட்டன. அவையாவன:

அ) ஆந்திராவுடன் இணைக்கப்பட்ட பகுதிகள்: சித்தூர் மாவட்டத்தின் பகுதிகள், திருப்பதி அதைச்சுற்றியுள்ள சில பகுதிகள், நெல்லூர் மாவட்டத்தின் சில பகுதிகள் முதலியன தமிழ்நாட்டிடமிருந்து பறிக்கப்பட்டன.

ஆ) கருநாடகத்துக்குச் சென்ற பகுதிகள்: கோலார் தங்கவயல் பகுதிகள், ஆனேகல் மாவட்டம் உள்ளிட்ட பெங்களூரு நகரத்தின் சில பகுதிகள், மண்டியாவுக்கும் பெலகாவிக்கும் அருகிலுள்ள பகுதிகள் முதலியன.

இ) கேரளாவுக்குப் போன பகுதிகள்: செங்கோட்டையின் சில பகுதிகள், தேவிகுளம், பீர்மேடு, பாலக்காடு, இடுக்கி மாவட்டத்தின் சில பகுதிகள் முதலியன.

ஈ) கச்சத்தீவு தமிழர்களின் இசைவின்றியும் நாடாளுமன்றத்தின் இசைவின்றியும் இனவெறிச் சிங்கள அரசிற்குத் தாரைவார்க்கப்பட்டது.

2. **ஆற்றுநீர் உரிமைகள்**: காவிரி, முல்லைப்பேரியாறு, தென்பெண்ணை முதலிய ஆற்று நீர் உரிமை நீண்ட காலமாகச் சிக்கலுக்குள்ளாகி உள்ளது. அமைக்கப்பட்ட காவிரி நீர் மேலாண்மை ஆணையம், காவிரிநீர் ஒழுங்காற்று வாரியம் ஆகியவற்றின் அதிகாரத்தை நீராற்றல் (சல்சக்தி) துறைக்குள் முடக்கி விட்டனர். குறைக்கப்பட்ட அளவிலான நீரைப் பெறவே நடைமுறையில் தமிழ்நாடு அடிக்கடி உச்சநயன் மன்றத்தை நாடவேண்டியிருக்கிறது.

முல்லைப்பேரியாறு அணை உறுதியாக உள்ளது என்பதை நடுவண் நீர்வளக் குழுவும், உச்சநயன்மன்றம் அமைத்த குழுக்களும் பலமுறை ஆய்வுசெய்து உறுதிப்படுத்தியுள்ளன. மேலும், உச்சநயன்மன்றம் அணையின் நீர் மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும், அணை பாதுகாப்பாக உள்ளது என்றும் தீர்ப்பளித்துள்ளது. ஆனாலும், கேரள அரசு அந்தத் தீர்ப்புகளை ஏற்க மறுத்து, தொடர்ந்து அணையைப் பேணுதற்குத் தேவையற்ற தொல்லை தருகிறது; சட்டப் போராட்டங்களை நடத்துகிறது.

தென்பெண்ணை ஆற்றின் துணைஆறான மார்க்கண்டேய ஆற்றின் குறுக்கே கருநாடக அரசு பங்கரப்பேட்டைப் பகுதியில் ஒரு புதிய அணையைத் தமிழ்நாட்டின் இசைவின்றிக் கட்டியுள்ளது. இது தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நீரின் அளவைக் குறைத்து, ஐந்து மாவட்டங்களின் பாசனத்தையும், குடிநீர்ப் பயன்பாட்டையும் தடுக்கிறது. உச்சநயன்மன்றம், ஒன்றியஅரசை இதற்குத் தீர்ப்பாயம் அமைக்கக் கூறியும், இதுவரை ஒன்றியஅரசு அமைக்கவில்லை. பெங்களூரின் தூய்மையாக்கப்படாத கழிவுநீர் நேரடியாகத் தென்பெண்ணை ஆற்றில் கலப்பதால், ஆறு பெருமளவு மாசுபடுகிறது.

பாலாற்றிலும் சிறுவாணியிலும் தடுப்பணைகள் கட்டித் தமிழ்நாட்டின் நீர் உரிமையைப் பறிக்கின்றனர்.

*3.* **பறிக்கப்படும் மொழி உரிமை**: பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகும், நாளொரு சொல்லும் பொழுதொரு தொடருமாகத் தொடர்ந்து இந்தியும் சங்கதமும் (சமற்கிருதம்) திணிக்கப்படுகின்றன. தமிழ்ச்சொற்களை வழக்கு வீழ்த்தி அழிக்கும் முயற்சி நடக்கிறது. இந்தி, சங்கதத் திணிப்பு, சங்கத வளர்ச்சிக்குக் கூடுதல் நிதி ஒதுக்குவது, அனைத்து இந்தியத் தேர்வுகளில் இந்தி, ஆங்கிலம் இரண்டை மட்டும் பயன்படுத்துவது, தொடர்வண்டித் துறை உள்ளகத் தொடர்புக்குத் தமிழைப் பயன்படுத்தக்கூடாது என்று அறிவிப்பு வெளியிடுவது போன்ற நடவடிக்கைகள் பா.ச.க. ஆட்சியில் அடிக்கடி நடக்கின்றன.

இந்தி, இந்தியாவின் ஒரே அதிகார அடிப்படை மொழி என்னும் போக்கு, தமிழைத் தாழ்த்தி தனக்குரிய இடத்தை இழக்கச் செய்கின்றது. ஒன்றிய அரசின் தேர்வுகளிலும், படைத்துறை, தொடர்வண்டித்துறை முதலிய துறைகளிலும் தமிழ் அறவே புறக்கணிக்கப்படுகின்றது.

*4.* **பண்பாட்டு உரிமைகள்**: தமிழர் பண்பாட்டு உரிமைகள் மறுக்கப்படுவதோடு வடநாட்டுப் பண்பாடுகள் வலிந்து திணிக்கப்படுகின்றன. ஏறுதழுவல் (சல்லிக்கட்டு) தடையை நீக்கப் பெரும்போராட்டம் நடத்த வேண்டியிருந்ததையும், வடவரின்

‘கோலி’ப்பண்டிகை தமிழகத்தில் வலிந்து புகுத்தப்படுவதையும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபுகள், கோவில்கள், மரபுவழிக் கலைகள் முதலியவை வணிகவயமாக்கப்பட்டு, அவற்றின் உண்மையான மதிப்பு உள்ளூர் மக்களுக்குப் பயன்படாமல், வெளிமாநில, வெளிநாட்டுச் சுற்றுலாச் செலவர்க்கும் ஒன்றிய அரசுக்கும் மட்டுமே உதவுகிறது.

*5. **நிதி உரிமைகள்**: தமிழகம் நிதித்துறையில் வஞ்சிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலிருந்து ஒன்றியஅரசுக்குச் செல்லும் வரி வருவாய்க்கு இணையாகத் தமிழ்நாட்டிற்கு நிதிஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில்லை. நாம் பங்களிக்கக்கூடிய ஓர் உருவா வரியில் 29 காசு மட்டுமே நமக்கு நிதிப்பகிர்வாகத் தரப்படுகின்றது. உ.பி., பீகார் போன்ற மாநிலங்களுக்குப் பலமடங்கு ஒதுக்கப்படுகின்றது. ஒன்றியஅரசு, நிதிப்பகிர்வு செய்ய வேண்டாத வரிவிதிப்புகளை அதிகமாக்கி வருவாய் பெருக்கிக் கொள்கிறது.*

*இயற்கைச் சீற்றங்களினால் தமிழ்நாடு தாக்கப்பட்டபோதெல்லாம் கூட, தகுந்த ஆய்வின்வழி அளவீடுகள் செய்த பின்னரும், பல முறை வலியுறுத்தியும், உரிய இழப்பீடுகள் வழங்கப்படவேஇல்லை. ஆனால், குசராத்து போன்ற மாநிலங்களுக்கு அளவீடுகளுக்கு முன்னரும் பின்னரும் கூட நிறைய வாரி வழங்கப்படுகின்றது. ‘சரக்குகள், பணிகள் வரி’ (GST) என்ற பெயரில் மாநிலங்களின் வரிதிரட்டும் உரிமைகளையே ஒன்றிய பா.ச.க. அரசு பறித்துவிட்டது.*

*ஒன்றிய அரசுத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு ஆளுங்கட்சி ஆளும் மாநிலங்களுக்குப் பெருமளவில் வாரி வழங்கப்படுகின்றது. தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகின்றது.*

*6. **கல்வி உரிமை**: மாநிலப்பட்டியலில் இருந்த கல்வி பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டு விட்டது. இதனால் கல்வியில் தமிழ்நாட்டின் தன்னுரிமை பறிக்கப்பட்டுவிட்டது. இந்தி, சங்கதம், ஆங்கிலத் திணிப்புத் தொடர்ந்து நடக்கிறது. இதனால் தமிழில் சொற்கள் வழக்கிழந்து தமிழின் அழிவுக்கு அடிகோலுகிறது.*

'தேசியத் தகுதி நுழைவுத்தேர்வு' (*NEET*) முறையால் மருத்துவக் கல்விச் சேர்க்கையில் தமிழ்நாட்டு உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டின் சிற்றூர்ப்புற நடுத்தகை, ஏழை மாணவர்களின் வாய்ப்புகள் பறிக்கப்படுகின்றன. பயிற்சி நடுவங்களின் கொள்ளைக்கு வழிதிறந்து விடப்பட்டிருக்கின்றது. மேலும், இத் தேர்வுகள், முழுவதும் நேர்மையாக நடந்ததாக வரலாறில்லை.

தேசியக் கல்விக் கொள்கை வழி மும்மொழி என்ற பெயரில் இந்தி, சங்கதத் திணிப்புக்குத் தந்திரமாக வழிசெய்யப்படுகின்றது. தமிழ்வழிக் கல்விக்கு வழியில்லை. மறைமுகமாகக் குலக்கல்வித்திட்டம் புகுத்தப்படுகிறது. பாடத்திட்டத்தில் தமிழ், தமிழர், தமிழக வரலாறு, கழக இலக்கியம், விடுதலைப் போரில் தமிழர் பங்களிப்பு முதலியவை பெரிதும் புறக்கணிக்கப்படுகின்றன. இது, தமிழர் அடையாள உரிமை பறிப்பும் ஆகும்.

தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காததால் 'ஒருங்கிணைந்த கல்வி இயக்கம்' (*Samagra Shiksha Abhiyan*) மூலம் தமிழ்நாடு அரசுக்கு விடுவிக்க வேண்டிய உருவா 2,500 கோடியை விடுவிக்காமல் தமிழ்நாட்டு மாணவர்களின் நலனை ஒன்றிய அரசு வஞ்சித்து வருகிறது.

7. **வளங்களின் உரிமைகள்**: வரலாற்று அடிப்படையில், ஒரு நிலப்பரப்பின் வளங்கள் அதன் முற்காலக் குடிமக்களுக்கே உரியவை என்பது பொதுவான கோட்பாடு. அவ்வகையில், தமிழ்நாட்டின் நீர், நிலம், கனிமங்கள், காடுகள் போன்ற இயற்கைவளங்கள் தமிழர்களின் மரபுவழிச் சொத்தாகக் கருதப் படுகின்றன. இந்த வளங்கள் மாநிலத்தின் பொருளியல் வளர்ச்சிக்கும், மக்களின் வாழ்க்கைக்கும் அடிப்படை. தமிழ்நாட்டில் உள்ள வளங்கள், தமிழ்நாட்டு வளர்ச்சிக்கும் தமிழர்களின் நலனுக்காகவும் பயன்படுத்தப்படவேண்டும் என்பது பரவலாக ஒப்புதலுள்ள கருத்து. இந்தியாவில் இது பின்பற்றப்படுவதில்லை.

அ) **இயற்கை வளங்கள், கனிமங்கள் சுரண்டல்**: தமிழ்நாட்டின் முகன்மை இயற்கை வளங்கள், கடுங்கரி (*Graphite*), சுண்ணாம்புக்கல் (*Limestone*), கருங்கல், படிகக்கல் (*Quartz*), வெளிமடம் என்னும் வெள்ளைக்கல் (*Magnesite*), அளமியக்கனிமம் (*Bauxite*), பழுப்பு

நிலக்கரி, கனிமமணல், இரும்புக்கனிமம், நீர்வளம் (ஆறுகள், ஏரிகள்), நிலவளம் முதலியவை ஆகும். இவை தமிழர்களின் வாழ்வடிப்படைக்கு இன்றியமையாதன. ஆனால், சுரங்கங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அமைப்பதன் பெயரில் இவை சுரண்டப் படுகின்றன.

குமரிமாவட்டத்தில் மலைகள் உடைத்துக் கடத்தப்படுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் சீர்கேடு, நிலச்சரிவு ஏற்படுவதுடன் உள்ளூர் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. கருங்கல், பிற கனிமங்களின் அகழ்வு, உள்ளூர் மக்களுக்குப் பயனளிக்காமல், தனியார் நிறுவனங்களுக்கு மட்டும் ஊதியம் தருவதாக உள்ளது.

ஒன்றிய அரசு, 'மாவட்டக் கனிமக் கட்டமைப்பு அறக்கட்டளை நிதி' முழுவதையும், தன் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக்கொள்கிறது. இது, மாநில அரசின் உரிமை பறிப்பாக உள்ளது.

ஆ) **சுரங்கங்களால் பறிக்கப்படும் உரிமைகள்**: சங்கரன்கோவில் குறிஞ்சாகுளத்தில் கடுங்கரி (Graphite) சுரங்கத்திற்காக 600 குறுக்கம் (Acre) பயிரிடு நிலங்கள் பறிக்கப்படுகின்றன. இது உழவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது. திருவட்டாறு அருகில் செறுகோல் மலைக்குன்றை உடைத்து 56,000 கனமாத்திரி (cubicmetre) மண் எடுக்க ஒரு நிறுவனம் செயல்படுகிறது, இது நிலச்சரிவு மற்றும் நலவாழ்வுச் சிக்கல்களை ஏற்படுத்துகிறது. தமிழ்நாடு கனிமவளத் துறை (Department of Geology and Mining) அறிக்கைகள் இந்தச் சுரண்டலை உறுதிப்படுத்துகின்றன. வடதமிழ்நாட்டில் (திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம்) இயற்கை வளங்கள் சீரழிவு ஏற்பட்டுள்ளதாகப் பிரித்திசு ஒலிபரப்பு வாரிய (BBC) செய்திஅறிக்கை கூறுகிறது.

இ) **காடுகள்**: தமிழ்நாட்டில் காடுகள் 17.59% பரப்பளவில் உள்ளன. தமிழ்நாட்டில் வெப்பமண்டலப் பசுமைமாறாக் காடுகள், இலையுதிர் காடுகள், சதுப்புநிலக் காடுகள் (பிச்சாவரம் மற்றும் திருமரைக்காடு) போன்ற பல்வேறு வகையான காடுகள் உள்ளன. காட்டுப் பாதுகாப்புச் சட்டங்களும் அதற்குத் திருத்தங்களும் (எடுத்துக்காட்டாக, 2023 கான் பாதுகாப்புத் திருத்த சட்டமுன்வரைவு) ஒன்றிய அரசால் கொண்டுவரப்படுகின்றன. இவை, காடுகளைப் பயன்படுத்துவது, பாதுகாப்பது போன்றவற்றில் மாநில அரசின் அதிகாரங்களைப் பறிக்கின்றது.

ஈ) **சுற்றுச்சூழல்**: நீரகக்கரிமத்திற்கான (hydrocarbon) அகழ்வு, சதுப்புவளிக்கான (methane) அகழ்வு, நுண்ணொதுமி (neutrino) ஆய்வகழ்வு, தங்குசுத்தன் (tungsten) அகழ்வு என்னும் பெயர்களால் சுற்றுச்சூழலையும், மண்வளத்தையும், நிலத்தடிநீரையும் மாசுபடுத்திக் கெடுத்திடும் செயல்களுக்கு ஒன்றியஅரசு தமிழக இடங்களைத் தேர்ந்தெடுத்து மக்களின் கவலையை மிகுத்து, மனஅமைதியைக் கெடுக்கிறது. ஒவ்வொன்றையும் தடுத்து நிறுத்தப் பெரும் போராட்டங்களை நடத்தி உயிர் ஈகமும் செய்ய வேண்டியுள்ளது. தூத்துக்குடிச் செப்புருக்குத் தொழிற்சாலை (Sterilite Factory) வரலாற்றை எண்ணிப் பாருங்கள்!

உ) **வேளாண் நிலங்கள், நீர் நிலைகள்**: பரந்தூர் வானூர்தி நிலையத்திற்காகத் தனியாரிடம் 3774 குறுக்கம் பயிரிடு நிலங்கள் பறிக்கப்படுகின்றன. முன்பு செப்புருக்குத் தொழிற்சாலைக்கு (Sterilite Factory) ஆயிரம் குறுக்கம் நிலம் பறிக்கப்பட்டது. இங்குள்ள நீர்நிலைகளும் அழிக்கப்படுகின்றன. இவற்றால், உள்ளூர்த் தமிழர்களின் வாழ்வடிப்படை பறிக்கப்படுகின்றது. மேலும், தொழிற்சாலையின் சுற்றுச்சூழல் மாசுபாடு இந்த நிலையை மேலும் மோசமாக்குகிறது.

8. **மீனவர் உரிமைகள் பறிப்பு**: கச்சத்தீவு தமிழர் இசைவின்றியும் நாடாளுமன்ற ஒப்புதலின்றியும் இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது. இதனால் தமிழ்நாட்டு மீனவர்களின் மரபுவழி மீன் பிடி உரிமைகள் (குறிப்பாகக் கச்சத்தீவைச் சுற்றியுள்ள கடலில்) பறிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாகத், தமிழக மீனவர்கள் காலங்காலமாக மரபுவழி மீன்பிடித்த பகுதியிலேயே மீன் பிடித்தும், எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, இன்றுவரை இலங்கைக் கடற்படையால் 800க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்; பல்லாயிரவர் தாக்கப்பட்டுள்ளனர்; தளைப்படுத்தப்பட்டோர் ஆயிரக் கணக்கானவராவார். பன்னூற்றுக் கணக்கான படகுகளும் இலங்கையரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசால் முன்மொழியப்பட்ட கடல்சார் மீன்வள சட்டமுன் வரைவு 2021 (Marine Fisheries Bill 2021) போன்றவை

*மீனவர்களின் உரிமைகளை மேலும் பறிக்கும் எனப் பல மீனவர் அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. மீன்வளம் என்பது மாநிலப் பட்டியலில் இருந்தும், அந்த உரிமையை ஒன்றிய அரசு பறிக்கிறது.*

*9.* **மக்களின் நல்லிணக்கம், அமைதி பறிப்பு**: *தன்னல நோக்கத்திற்காக மக்களிடையே மத, சாதி உணர்வுகளைத் தூண்டி அவர்களிடையே நல்லிணக்கமும், அமைதியும் கெடுக்கப்படுகின்றது; பறிக்கப்படுகின்றது. இதனால் மக்கள் பலவகையான துன்ப துயரங்களுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள்.*

*10.* **மின்துறையில் உரிமை பறிப்பு**: *அரசமைப்புச் சட்டத்தில் மின்சாரம் பொதுப்பட்டியலில் உள்ளது. மின்சாரத் திருத்தச் சட்டத்தின் மூலம் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (State Electricity Regulatory Commission) தலைவரையும் உறுப்பினர்களையும் அமர்த்தும் அதிகாரத்தை ஒன்றியஅரசு எடுத்துக்கொள்கிறது. இது மாநிலஅரசின் உரிமை பறிப்பாகிறது.*

*மின்சார சட்டத்திருத்தம்–2022 மூலம் மாநிலங்களில் மின்சார வாரியத்தால் உருவாக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை ஆணையங்களின் அதிகாரங்களை ஒன்றியத்திலுள்ள ஒழுங்குமுறை ஆணையம் முழுவதும் பறித்துக்கொள்கிறது.*

*மின்சார ஒப்பந்தங்களைச் செயற்படுத்துவதற்காக அமைக்கப்படும் 'மின் ஒப்பந்த செயற்படுத்த ஆணையம்' (Electricity Contract Enforcement Authority) ஒன்றியஅரசின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. இதில் மாநிலங்களுக்கு உறுப்பாண்மை இல்லை. இதுவும் மாநில உரிமைகளை மீறும் ஒரு செயலாகும்.*

*தமிழ்நாட்டின் மின் தேவையையும் வழங்கலையும் மேலாண்மை செய்வதில் தமிழ்நாடு மின் உருவாக்க, பகிர்மான நிறுவனம் (TANGEDCO) முகன்மையாகவுள்ளது. ஆனால், மாநிலத்தின் மின்வலையிணைப்பும் (Grid), முகன்மைக் கடத்தற் கம்பிகளின் மீதான கட்டுப்பாடும் மின்தொகுப்பின் (POWERGRID)*

கைகளில் உள்ளன. இது மாநிலத்தின் முழுமையான கட்டுப்பாட்டைக் குறைக்கும் வகையில் உள்ள உரிமை பறிப்பாகும்.

11. **கூட்டுறவுத்துறை உரிமை பறிப்பு:** கூட்டுறவு மாநிலப் பட்டியலில் இருக்கிறது. அதை ஒன்றியஅரசுப் பட்டியலுக்குக் கொண்டுசெல்லும் வகையில், அரசியல் சட்டத்திருத்தம் கொண்டுவர ஒன்றியஅரசு முனைப்புக் காட்டுகிறது. கூட்டுறவு அமைப்புகள், அந்தந்த ஊரில் உள்ள மக்களால் அங்கேயே அமைக்கப்படுவனவாகும். இது மாநிலஅரசுப் பட்டியலில் இருந்தால்தான் மக்களுக்கும் பயனளிக்கும். மாநிலஅரசும் நேரடியாகக் கண்காணிக்க முடியும்.

12. **ஒன்றிய அரசின் வழிகாட்டுதலைப் பின்பற்றியதால் உரிமை பறிப்பு:** ஒன்றியஅரசின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டில் பிறப்புத் தகவு (விகிதம்) கட்டுப்படுத்தப்பட்டது. இந் நிலையில், அதற்குத் தண்டனை என்னும் வகையில், மக்கள்தொகை அடிப்படையை வைத்து நிதிப்பகிர்வு செய்யப்படுகின்றது. மேலும், 2026–இல் நடைமுறைப்படுத்தக் கருதியிருக்கக்கூடிய நாடாளுமன்றத் தொகுதிகள் மறுவரையறை மக்கள் தொகை அடிப்படையில் செய்யப்படுமானால், தமிழ்நாட்டின் உறுப்பாண்மை மிகவும் குறைக்கப்படக் கூடிய கெடுதல் நேரவிருக்கின்றது.

13. **ஆளுநர் பதவியால் உரிமை பறிப்பு:** உலக அளவில் கூட்டாட்சி அமைப்பை வைத்திருக்கும் முதன்மை நாடுகள் எவற்றிலும் ஒன்றியஅரசு ஆளுநரை அமர்த்தம் செய்யும் முறை இல்லை.

மாநிலஅரசு எந்தச் சட்டம் இயற்றினாலும் ஆளுநர் கையெழுத்திட்டு ஏற்பு வழங்க வேண்டும். தமிழ்நாட்டரசு இயற்றிய பல சட்டங்களுக்கு ஆளுநர் ஒப்புதல் தராமல் காலவரம்பின்றிக் கிடப்பில் போட்டு வைத்ததையும் இதன் தொடர்பாக உச்சநயன்மன்ற வழக்குகள் உள்ளதையும் பார்த்து வருகின்றோம். அமர்த்தப் பதவியான ஆளுநர் பதவியிலிருப்பவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களை நிறுத்திவைத்து மக்களின்

*உரிமையையே செல்லாததாக்கிவிடுகிறார். இப்படி ஆளுநர் பதவி மக்களின் உரிமையைப் பறிக்கும் நிலையைப் பார்க்கின்றோம்.*

*14.* **காவல்துறை உரிமை பறிப்பு**: *காவல்துறை மாநிலப் பட்டியலில் உள்ளது. அதையும் மீறி ஒன்றியஅரசு 'ஒன்றிய சேமக் காவல் படை'யை (Reserve police) வைத்திருக்கிறது. மாநிலங்களின் இசைவு பெறாமலேயே, அப் படையை மாநிலங்களுக்குள் அனுப்பலாம்; செயற்படச் செய்யலாம். இதுவும் உரிமை பறிப்பே.*

*இவ்வாறு பல துறைகளிலும் பறிக்கப்படும் உரிமைகளை எடுத்துச் சொல்லலாம். எனினும், விரிவுறல் எண்ணி இத்துடன் நிறுத்திக்கொள்கின்றோம். இப்படிப்பட்ட உரிமை பறிப்பு ஆளுமையைத் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் தவிர்க்க வேண்டுமானால், செவ்வைக் கூட்டாட்சி நாடுகளில் உள்ளதைப் போல் மாநிலங்கள் பல துறைகளிலும் முழு அதிகாரங்கள் உள்ளனவாக இருக்கவேண்டும். அதிகாரப் பறிப்பிற்கு வழியிருக்கக் கூடாது.*

*இவற்றையெல்லாம் தமிழ் இளையோர் எண்ணிப் பார்க்கவேண்டும்; தீர்வு காண முயலவேண்டும்.*

**நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த**
**இல்லாண்மை ஆக்கிக் கொளல்**. *– கு.1026.*

**– த.ந.**

---

## உயிருள் பழந்து உவப்பில் சிறக்கும் அவிப்பு மணம்!...

*மழை பொழிகையில் –*
*நெல் அவிக்கையில்*
*இழுக்கும் மணமொன் றெழுமே!...– அது*
*ஏழ்ந்து தவழ்ந்து மூக்குள் குளித்து*
*முழுத்துங் குளிர்ந்து மூளை யகத்துள்*
*உவப்பு மழையைப் பொழிமே!*

**– அருளியார்**

# அருளிச் சுவடி

*(அஃதிருந்தோர் – அருஞ்சிறு குறுவரி)*
*(= அஃது+இருந்து+ஓர்+அரும்+சிறு+குறு+வரி)*

**அரியகற் கவாவு**

***சொற்பிரிப்பு:*** *(இயல்பு) அரிய – கற்க –அவாவு.*

*சொற்பொருள் : அரிய = அரியன, அரும்பொருள்கள், அரும்பொருள்களை உள்ளடக்கிய நுண்மையார்ந்த உயர்நூல்கள்*

*கற்க: கற்பதற்காக– (கற்றுத் தேர்வதற்காக)*

*அவாவு: அவாக்கொள்–பற்றுக் கொள் – பெரு விருப்பங்கொள்.*

*"அவ்" :– கீழுதடு – மேலுதட்டின்கீழே பற்களோடு பற்றிப் பொருந்திய உட்கிடப்பிலாக எழுப்பியதன் ஒலியீட்டினுள் – பற்றுகைப்பொருட்பாடு அதனுள் இருப்பதனையும் உணர்ந்து – அதனின்று பற்றினைக் குறித்த "அவவு" என்றவாறு, ஓர் அருஞ்சொல் எழுப்பினான், – நம்மவன்!*

*வேட்கையெனும் விருப்பத்தைக் குறித்த அவ் "அவவு" எனும் சொல் கழக இலக்கியங்களுக்கிடையே மூவிடத்துள் பதிவுற்றுளது!*

*"அவவுக் கைவிடுதலும்" (கலி.: 14 : 19) (மேலுங் காண்க: நற்றிணை: 212 : 10 ஐங்குறு: 360 : 3)*

*விருப்பமெழும் மனத்தை, "அவவுறு நெஞ்சம்" என்னும் பெருங்கதை. (பெருங்: 2:18:8) வினைச்சொல்லாகவும் – பண்புப்பெயர்ச் சொல்லாகவும் வழங்கப்பட்டிருத்தல் – சொல்லமைவு உணர்த்தும் செய்தி! "அவவு" எனும் வினைச்சொற்பொருட்பாட்டு வழக்கினை "அவாவு" எனும் சொல்லாட்சியுள் தெளியலாம்! (காண்க: "உறையுள் வயங்கியோர் அவாவும்.... சோலை" குறிஞ்சி: 213 : 214) (ஒரு சொல் தன்னொடு பொருந்திப் பொருள் முடித்தற்குரிய மற்றொரு சொல்லை வேண்டி நிற்கும் நிலை, "அவாய் நிலை"! (காண்க: தொல். சொல். 1. சேனாவரையர்)*

*அவவு > அவா (ஒ. நோ.: நிலவு > நிலா உலவு > உலா)*

***பொழிப்புரை:*** *அரும்பொருள்களை உள்ளடக்கிய உயர்நிலைச் சிறப்புநூல்களைக் கற்றுத் தேர்வதற்கென்று பெருவிருப்பங் கொள்ளுவாயாக!*

**கருத்து**: கற்றுத் துறைபோகிய அரும்பெருந் திறக்கல்வியாளர்களால் ஆழ்ந்துணர்ந்து ஆவணப்படுத்தி வைத்துள்ள நுண்ணிய ஆற்றல்சான்ற அரும்பொருள்களார்ந்த நூல்களைக் கற்றுத் தெளிவடைந்து பயன்விளைக்க வேண்டுமென்ற பெருநோக்கத்தோடு அவற்றை மேற்கொள்ளப் பெரிதும் விரும்புவாயாக!

**குறிப்பு**: மிகப் பல கோடி நூல்கள் இதுவரை எழுதப்பெற்றுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன! இன்று– இவ்வுலகில் நொடிக்கு நொடி நூற்றுக்கணக்கில் நூல்கள் உருவாகி வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

[நடை பயின்று ஓடவும் இயலும் மூவகவைக் குழந்தையொன்று – இதுவரை உலகில் வெளியாகியுள்ள நூல்அணிவரிசைகளில் ஒவ்வொரு ஆக்கத்தையும் கைவிரலால் தொட்டவாறே ஓடத் தொடங்கினால் – இதுவரை வந்துள்ள நூல் ஆக்கங்களை மட்டுமே தொட்டு முடிப்பதற்கு – அக் குழந்தை குறைந்தது மூவாயிரம் ஆண்டுக்காலம் உயிர்வாழ்ந்தாக வேண்டும் – என்பது உண்மையான ஒரு விளையாட்டுக் கணக்கு!.... எங்கோ – எப்பொழுதோ படித்தது நினைவுப் பாதையில் ஓடுகின்றது!]

கணியுள் – (கணிப்பொறியுள்) பரம்பலுறும் துறைச்செய்திகளின் பருப்பமோ – சொல்லி மாளாது! பல்வேறு ஊடகங்களிலும் அறிவுச் செய்திகள் பரப்பப் பெறுகின்றன! அறிவியல் வானெழுந்துலவி விரையும் பேராற்றற் காலத்தில் நாம் அனைவரும் வாழ்கின்றோம்!

("கணினி" என்பது, தமிழ் மரபறியாத எவனோ ஒரு தாட்டோட்ட மடவனால் உருவாக்கப்பட்ட சொல்; அரைவேக்காட்டு பருப்பு!... இலக்கண–வறிஞன் ஒருவனுக்கு இவ் வேகாமை விளங்காது!)

கணித்தல் எனும் வினைப்பெயர், கணக்கிடுதலைக் குறிப்பதாகும்! கணக்கிடுதலும் கணிப்பிடுதலே! இக் கணிப்பீட்டு வினைப்பொறியினைக் "கணி" என்ற சொல் கொண்டே பொருத்தியாளுகை, – மரபுவழிக்கு எதிரானதன்று! மரபே! உட்படுவதே!

"கணி" என்னும் சொல், வினைச்சொல்லாக மட்டுமன்றிக் கணிப்பவனாகிய ஆளுக்குமாகப் பொருத்தலுற்று வழங்கிய ஆட்சியை ஓர்ந்து அறிதல் வேண்டுவதாகும்!

குறிப்பிட்ட துறையில் தேர்ந்த அறிஞன் ஒருவனைக் "கணி" என்றதும், பண்டை வழக்கே! (காண்க: "ஆசான் பெருங்கணி" சிலம்பு: 22 : 8)

எனவே, "கணினி" எனல், இனி – வேண்டா!

"கணி" என்னுக! கனிந்த கனிச்சொல், இது! வழங்குமாறு கனிவுடன் வேண்டப் பெறுகின்றது!

"கண்டது கற்கப் பண்டிதனாவான்!" என்பது, நீண்ட காலமாகவே வழங்கிவரும் ஒரு தமிழ்ப் பழமொழி! இப் பழமொழிப்படியே கண்ணில் கண்டநூல்களையெல்லாம் – கையிற் கிடைத்த செய்தித் தொகுப்புக்களை– யெல்லாம் படிக்கவும், கவனம் செலுத்தவும், ஊன்றவும் ஆக, நாம் வினை மேற்கொள்ளின் – உண்மையான திற மேம்பாட்டை நாம் அடையவியலாது! நேர அலைக்கழிப்பில் மாட்டிக் கொண்டு வீணே அலமருண்டு செயல்திறங் குலைத்துக் கொண்டவர்களாகவே ஆவோம்!

"கண்டது கற்கப் பண்டிதனாவான்!" என்பதை மேற்கொள்ளுவோன் எவனும் இந்நிலையையே அடைவான்! எந்த நிலை?"கண்டது கற்க முண்டமாவான்!" என்பதுவே, அந் நிலை!

தான் மேற்கொண்டுள்ள தொழிலுக்கேற்ற – தெள்ளிய – நுண்மையார்ந்த அருந்திறப் பெருநூல்களை – அத்துறையில் கற்றுத் திறம் பெற்று மேம்பாடடைந்துள்ள அறிவர்களிடம் கருத்து விளக்கம் பெற்று, உரிய அவ் அரிய நூல்களைப் பற்றி அறியவும் – அடையவும் பெற்று ஆழ்ந்து அவற்றுக்குள் கருத்துச் செலுத்தித் தெளிவார்வதற்கென்று பெருவிருப்பத்தைக் கொள்ளவேண்டும்.

விருப்பங்கொள்ளுதல் – வினைமேற்கொண்டு சிறப்பதற்காகவே! வெறும் விருப்பம் மட்டுமன்று, ஈண்டுக் குறித்த கருத்து! 'அறஞ்செய விரும்பு!' என்பதனுள் விருப்பத்தினை மேற்கொள் என்பதற்கும் மேலாக, – விரும்பி வினைமேற்கொள்ளுக! என்னும் பொருள் உள்ளடங்கியிருப்பதைப் போன்றதுவே– இவ் "அவாவு" எனும் சொல் தரும், பொருளுமாம்!

******

# கற்பு!

**– பேராசிரியர் அருளியார்**

"கல்" எனும் சொல், "ஒலி" எனும் பொருளது! "கலி" என்பதுவும், ஒலியே! (காண்க : தொல் : சொல் உரி : 832:1) ஒலியீட்டின்வழியே அறியப்பெறும் கேள்வியறிவு (கல் >கல் +உ> கல்வு > + இ )கல்வி எனப் பெற்றது! (கல்லினைக் குறித்த சொல், இதனின்றும் வேறாய பொருளில் எழுந்தது! சிறிய நுண்கல் என்பதனின்று–மலையாகிய கல் என்பது வரையிலாக அது நீடி நெட்டுற்றது!) கல் = மலை (கருதுக: திண்டுக்கல், நாமக்கல், வட பெருங்கல் = இமயம்) (கல் > *Latin* ) *Collis: small mountain (L) Collis > (English) hill (hillock* , குன்று!) "கல்" என்பதுவும் (கல் + க >) "கற்க" என்பதுவும் வியங்கோள் வினைச்சொற்கள்! " கல்" என்பதனின்றே, கல் + பு > கற்பு எனும் சொல்லெழுந்தது! அதுவும் கல்வி எனும் பொருளதே! (காண்க : எழுதாக் கற்பு: குறுந்:156:5) மறை, ஓத்து (வேதம்)

"இல்லறம்" மேற்கொண்டவளாகிய ஒரு பெண்ணுக்கு அமைந்திருக்க வேண்டிய பண்புநலனாகத் தமிழகம் குறிப்பிட்டு வழங்கிய "கற்பு" எனும் சொல் அப் பெண்ணானவள் தமிழுலக வாழ்வியல் கற்பித்த வண்ணம் இல்லறநெறியில் மேற்கொண்டியங்க வேண்டிய ஒழுகலாறான கடைப்பிடி, எனும் பொருளதேயாகும். திருக்குறளில் ஒரேயோரிடப் பதிவுடையது, இச் சொல்! (காண்க: குறள் : 52) அக் குறளுள் பயிலும், "கற்பென்னும் திண்மை" எனும் கருத்தாட்சி கண்டு, உரையறிஞருட் பலரும் கல் போன்ற மனத்திண்மை எனப் பொருள் குறித்தனர்! (கல்+பு>கற்பு) அது, தவறு!...

## அதர்ந்தெழுவாய்!

*மொழிக்கலப்பும் இனஇழிவும் பண்பாட்டு வீழ்வும்*
*முழுஅடிமை அரசியலும் பொருளியலும் உன்னை*
*விழிக்கவிலா உறக்கத்தில் ஆழ்த்தியடி வீழ்த்தி,*
*விலங்குகளாய்ச் சமைத்தனகாண்!உணர்கிலையே! தமிழா!*

**–பாவலரேறு பெருஞ்சித்திரனார் –1975**

## வினவிய வினாக்களும்–அருளியார் விடைகளும்!...

**அன்றில்:** "தேவநேயம்" என்று, தாங்கள்தாம் முதன்முதலில் பாவாணர் கொள்கைகளைச் சுட்டினீர்கள், அக்கொள்கையை வலுவூட்டி இன்றும் தமிழ்மையைக் காட்டிவருகின்றீர்கள்!... "தேவநேயம்" என்றதற்கு விளக்கம் தாருங்கள், ஐயா!

**அருளியார்:** *1979 (சனவரி) சுறவத்திங்களில் என்னுடைய மொழியாய்வுக் கட்டுரைநூலான "தகுதி" வெளிவந்து இருந்தது! அந்நாளில் என்னின் முன்னுரையில்தான், – இக் குறியீட்டுச் சொல்லை முதன்முதலில் பதித்தேன்!*

*தமிழே!.. "உலக முதன்மொழி" – திரவிட (தமிழிய) மொழிகளின் தாய்" – ஆரியமொழிகளின் மூலம்" என்றவாறான மூன்று கருத்துகளையும் நிலைநிறுத்துவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிவினைகளின் தொகுப்பே – "மொழிஞாயிறு" பாவாணர் அவர்களின் வாழ்க்கையாக இருந்தது! அதற்கெனவே மூச்சுயிர்த்த முனிவர், அவர்!... அம் மூவரிய கொள்கைகளின் முழுமைத் தொகுப்புக்கும் ஒட்டுமொத்தமாகப் பெயரிட வேண்டுமானால் அவரின் இயற்பெயரையே அடிப்படையாகக் கொண்டு "தேவநேயம்" என்று சுட்டி வழங்கலாம் என்பது, என் கருத்தாகும்!*

*இம்மூன்று தனிக்கொள்கைகளையும் நன்கு வலியுறுத்து–வதற்காக, அவரால் எழுதப்பெற்றவையே, "The Primary Classical Language of the World". திரவிடத்தாய், வடமொழி வரலாறு ஆகிய முந்நூல்கள்! அவரின் மற்ற – பிற நூல்கள் பலவற்றிலும் இம் மேற்சுட்டிய முக் கொள்கைகளுக்கான வலியுறுத்தங்களும் எண்ணப்பாய்வுகளும் நன்கு பரவலுறப்பதிந்துள்ளனதாம்! எனினும், அவை ஓர் எல்லைக்குட்பட்டன! இருப்பினும், அவற்றை முற்ற நிறைவேற்றுதற்கு இன்றைய அறிஞர்களிற்பலர் முன்னின்று முனைந்து பாடாற்றியாக வேண்டும்! அக் கொள்கைகளை முறையுற இன்னும் வரையறுத்தாக வேண்டியுள்ளது! பேராளமான இடைவெளிகள்,*

*வந்துள்ளனவாகிய வெளியீடுகளில் உள! அவற்றை – அறிவுலகம் இசைந்தேற்று – ஏற்பளித்து – பின்பற்றக்கூடிய அளவில் விரைவாகவும் நிறைவாகவும் நிரப்பவேண்டியுள்ளது! அவை அனைத்திற்கும் தேவநேயமே வழிகாட்டியாகவும் ஊடகமாகவும் அமைந்திலங்க வல்லதாகும்!*

**அன்றில் :** *இன்றைய தமிழினம், பாவாணர் கருத்துக்களைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை! இது, தமிழர்களின் பெருங்குறை! இக் குறையைப் போக்க என்ன செய்யலரம்?*

**அருளியார்:** இக் குறைக்கு அடிப்படை, நம் தமிழர்களின் தன்மானமில்லாத் தன்மையேயாகும்! "நாணாமை – நாடாமை – நாரின்மை – யாதொன்றும் பேணாமை" என்னும் நான்கு வகைப்பட்ட கேட்டுணர்ச்சிகளைத் தொழிலாகவே செய்து வாழ்ந்துழன்றுவரும் பேதை இவன், எனத் தமிழனைச் சுட்டினார், நம்வள்ளுவர்பெருமகனார்! இன்றும், இந்நிலைகள் இவ் இனத்தானிடம் அச்சுக்குலையாமல் அப்படியே கிடந்துவருகின்றன! "தன்மானம்" வந்துவிட்டால் தன்மொழியாகிய தமிழே "தாய்மொழி" என்னும் அறிவுணர்வு வரும்! தாய்மொழியாகிய தமிழ்மீது பற்றுணர்வு பற்றிவிட்டால், "தான் தமிழன்" என்னும் தன்னுணர்வு தழைப்பெய்தி விடும்! "தான் தமிழன்" என்ற தெளிவும் உறுதியும் உள்ளத்தில் கால்கொண்டு விட்டால் – தான் வாழும்நாடு "தமிழ்நாடு",– தம் மக்களின் தொகுப்பே தமிழினம் என்றவாறான வரையறுப்புடைய சிறப்புணர்வுகளும் உள்ளத்தில் உலவும்; நிலவும்! உரிமைவேட்கை ஊறும்! ஒற்றுமை ஓங்கும்! அன்பு சுரப்பெழும்! அகம் துலக்கமுறும்! வீரம் வீறிவரும்! நேர்மைப்போக்கே எதிலும் எங்கும் நேரும்!

அந் நிலைகளினூடேதாம் – தன்மொழியையும் இனத்தையும் நாட்டையும் பற்றிய பற்றுணர்வு, உள்ளத்திற் பற்றும்! அதற்குரிய வரலாறுகளாகத் தேடித்தேடித் துருவித்துருவிப் பயிலுதற்குரிய பாய (பாசம்) உள்ளெழுச்சியும் பாய்ந்தெழும்!

இத் தமிழனுக்குரிய பெருமை – இன்றைக்கு இவனின் ஒரே சொத்தாக நின்று நிலைபெற்றுள்ள தமிழில் மட்டுமே உள்ளது! ஒட்டுமொத்தமாகக் கூறவேண்டுமானால் – இன்றைக்கு இவன் தமிழனாக இல்லாமலிருந்தும் – அதற்குரிய தகுதியேயற்ற தறிதலையனாக இருந்தும் – இவனைத் "தமிழன்!" என்றவாறு பெருமைவாய்ந்த பெயர்ச்சுட்டுதலை நிகழ்த்தி நிலைநிறுத்திக் கொண்டிருப்பது, ஆற்றல்சான்ற அருந்தமிழ்மொழியே ஆகும்! அதுதான் இவனை, இன்றும் ஓர் ஆளாக, ஓர் இனத்தானாக, ஒரு நாட்டாளியாகச் சுட்டி நிலைநிறுத்துகின்றது!

மிகப் பல்லாண்டுகளாக இவனின் பகைவர் அனைவரும் மிகமிக விழிப்பாகவும் விரைவுவிரைவாகவும் – கரவு கரவடங்களோடும் – வஞ்சகச் சூழ்ச்சிகளோடும் அல்லும்பகலுமாக அயராது அழித்தொழிக்க முற்பட்டவராகவே இயங்கிவருவதற்குத், தானும் ஒரு துணையாக நின்று தோள்தந்துவரும் இத் தமிழனையும் அது ஒரு கை பார்த்தவண்ணமே, – தன்னிலை தாழாதும் தளராதும் – நிலைத்த நடையிட்டு உயிர்த்துநிற்கும் வியப்பு, பென்னம்பெரிய இறும்பூதுடையதாகும்!

கிரேக்கத்துக்கும் – இலத்தீனத்துக்கும் – சமற்கிருதத்துக்கும் நேர்ந்துவிட்ட அருங்காட்சியகநிலைபேறு அல்லது உயிர்ப்புடையது போலுங் காட்சியூறு ஏன் தம் தமிழ்மொழிக்கு நேரவில்லை?!... அது ஓர் இயற்கை மொழியாக – இயல்புமொழியாகப் – படிமலர்ச்சியுள் பதனெய்தி, முறைவளர்ச்சியில் முளைத்தெழுந்து ஆழவும் – அகலவுமாக உள்ளோடிப் பற்றிய உரத்த வேர்களைக்கொண்ட தெளிந்த நெடுவளமொழியாக, நீண்ட நெடுங்காலத்திற்கும் முற்பாடேயே நிலைப்பட்டுவிட்டமையே,– அதற்குரிய காரணமாகும்!

தமிழறிஞர்களிற் பெரும்பான்மையர், பொதுநலவுணர்வு அற்றவர்களாகவும், எதற்கும் அஞ்சும் உள்நடுங்கியொடுங்கி–களாகவும் – தம் வாழ்வியல்நலங்கள் தவிரப், – பிற பொதுச்சிக்கல்கள் எவற்றிலும் அறவே தலையிடாது ஒதுங்கிப் பதுங்கிக்கொள்ளும் இயல்பினராகவும் இயங்கினர்; இயங்குகின்றனர்!

பாவாணர் நூல்களைப் படித்தறிவதற்குத் தமிழியல் அறிஞர்களே – தமிழ்ப்புலவர்களே –தமிழாசிரியர்களே விருப்பங் காட்டவில்லை! அவற்றை விரும்பி விலைகொடுத்து வாங்கிப் படிக்க முன்வந்த முனைவர்களை விரலெண்ணிக்கையாலேயே சுட்டிவிடலாம்! அவ்வளவு குறைவினர்!... தமிழால் பணிபெற்று வளம்பெற்று வாழ்க்கைவாய்ந்த தமிழாசிரியர்களுக்கே, – பாவாணர் பெருமகனார் பரவலுற அறிமுகமானாரிலர்! ஏனெனில், பெரும்பான்மையான தமிழாசிரியர்கள், தமிழியலில் – எவர் எவர் ஈடுபடுகின்றார்கள்?!... என்னென்ன கருத்துக்களை முன் – வைக்கின்றார்கள்?! என்பன பற்றியெல்லாம் தெரிந்துகொள்ளவும் ஈடுபாடுகொள்ளவும் விருப்பங்கொள்ளாமலேயே கொன்னே காலங் கழித்துச்சென்றனர்; இன்றும் அப்படிக் காலங்கழிப்பதையே கடனாகவும் கொள்கின்றனர்!

இதுபற்றிய நிலையைக் கருத்திற்கொள்ளவும் – ஈடுபாடுகொள்ளவும் – போற்றவும் – பேணவும் – பயன்படுத்தவும் பரப்பவுமான பணிகளை மேற்கொள்ளவேண்டிய தமிழாசிரியர்கள், தமிழ்ப்புலவர்கள், தமிழ்ப்பேராசிரியர்கள் ஆகியோரே அக்கறையும் கருத்தும் அறவே கொள்ளாதாராய்ப் புறக்கணிப்பாகப் போய்க்கொண்டிருக்கையில் – ஒட்டுமொத்தமாகத் தமிழர்களையே பொத்தாம்பொதுவாக நாம் குறைகூறுவது முறையானதன்று!

இவைபற்றியெல்லாம் மீளவும் சிந்தித்து நொந்து கொள்வதை முற்றுமாக இனிப் புறந்தள்ளிவிட்டு, – மொழி இன நாட்டு நலங்களில் பொறுப்பும் கடமையும் உணர்ந்த நாம், அவரை (பாவாணரின் ஆக்கங்களை) மீளவும் தொடக்கத்திலிருந்து படிக்கவும் பொருந்தியவற்றைப் பரப்பவும்– பொருந்தாதனவற்றைப் பற்றி ஆழ ஆய்ந்து புதுக்கருத்துகளை வெளிக்கொணரவும், தமிழியல்சார் மானக்கருத்துகளைத் தொடர்ந்து விளம்பவுமாக உரியவினைகளை உடனடியாக முனைப்போடு மேற்கொள்ள வேண்டும்! அல்லவை தேய்ந்து அறம்பெருக வேண்டுமானால், நல்லவர்கள் நல்லனவற்றை நாடி உரியமுறையில் வெளிப்படுத்தத்தாமே வேண்டும்! அதனை, நாம் செய்யத் தொடங்குவோம்!

**தொல்புதையல் :** *வேர்ச் சொல்லாராய்ச்சியில் தாங்கள் பின்பற்றும் முறையாது? அதில் கண்ட முடிவு யாது, சுருக்கமாக!...*

**அருளியார்:** வேர்ச்சொல் தெளிவுக்கு உரிய பல்வேறு கோணங்களையும் எம் மூளையுள் முளைக்கச் செய்த திறவுழவர் – வழிகாட்டி – **மொழியியல் தந்தை "மொழிஞாயிறு" தேவநேயப் பாவாணர்** அவர்களே! என்னின் எந்த வேரியற் சிந்தனையுள்ளும் அப் பெருமகனாரின் சிந்தனையோட்டங்களே எப்பொழுதும் முன்னெழுந்து நிற்கின்றன! விளக்கமுறைகள் பலவும் அவர் வழிப் பட்டனவே! வேர் பற்றிய – அதற்கும் கருவான வித்து பற்றிய புத்தம்புதிய தெளிவுகள் கடந்தியன்ற மூன்று பத்தாண்டுகள் தொடர் தோய்வில் என்பால் உருவாயின! அவற்றின் பயன்களோ பாவாணர்ஐயா முயற்சிகளினும் மேம்பட்டு நிற்பவை! எதிர்காலத்திலும் அம்முடிவுகளும் பட்டியல் ஆவணங்களும் முற்றி வெளிவரும்போது, யான் இப்பொழுது சொல்லும் கூற்றுகளின் உண்மைகளை உலகம் உணரும்!

இனச்சொற்பொருட் பதிவுகள் – பொருள் வளர்ச்சியாக்கப் பதிவுகள் – தமிழிய மொழிகளில் நின்று படிவுகளாகியுள்ள அவற்றின் கிளைக்கீற்றுகள் – கழக இலக்கியங்களில் – இலக்கணங்களில் அவை சார்ந்த படிவுகள் – வழக்கில் அறாது இன்றுந் தொடரும் நிலைப்புக்கருத்துகள் – பழமொழிகள் – விடுகதைகள் போன்ற இலக்கியங்கள் – நாட்டுப்புறக் கதைகள் என்பன போலும் மிகப்பல களங்களும் ஆய்வுக்கருவைச் சூழ்ந்து நிற்கும் நிலையில், பல்வேறு ஒப்பீடுகள் கொண்டு வரையறுக்கப்பெற்ற முறைபிறழாத தீர்வு சான்ற முடிபுகளே – எம் ஆய்வுகளில் விளைவுகளாக நிற்கின்றன; ஒழுங்கான ஏரணஇயல் சான்ற முறையும் முறையுறப் பின்பற்றப்பெறுகின்றது!

அறுபது ஆய்வு நூல்களுக்குள்ளும் – நூற்றுக்கணக்கினவான கட்டுரைகளுக்குள்ளும் என்னின் இம்முறைப் போக்கின் பதிவுகளை எவரும் கண்டு தெளியலாம்!

**தொல்புதையல் :** *கீழடி ஆகழாய்வு மூலம் தமிழ் மொழியின் காலம் 2300 ஆண்டுகளிலிருந்து 2600 ஆண்டுகளுக்கு முந்தையது என மெய்ப்பிக்கப் பெற்றுள்ளது! தமிழ்மொழி எழுத்து தோன்றிய காலம் எதுவாக இருக்கும் எனத் தாங்கள் கருதுகிறீர்கள்?*

**அருளியார்:** *கீழடி அகழ்வாய்வு தமிழ்மொழியின் காலம் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை உறுதி செய்துள்ளது! அதனினும் மீமுந்தையது தமிழரின் நாகரிக – பண்பாட்டு மேம்பாட்டு வாழ்வியல் கால நீட்சி! தமிழகத்தில் கி.மு.5–ஆம் நூற்றாண்டுக்கு முன்னீடேயே, தமிழ் எழுத்துகள் பொறித்த கல்வெட்டுகள் காணக்கிடைக்கின்றன! அதற்கும் பிந்தி 200 ஆண்டுக்காலம் கழித்தே, அசோகன் தான் நிறுத்திய கல்வெட்டுகளில் எழுத்துகளைப் பொறித்தான்! 2700 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்துள்ளே வந்துள்ள முதல் வரியே 'எழுத்து' எனத் தொடங்கும் வரலாற்று ஆவணப்பதிவின் காட்சியினுள்ளும் – பல்லாயிரம் ஆண்டுப் பழமைத் தொடர்ச்சிமாட்சியினை உற்றுநோக்கவல்லார் உணரலாகுவர்!*

**தொல்புதையல்** : *மழலையர் கல்வி முதல், பல்கலைக்கழகக் கல்விவரை பயிற்றுமொழி ஆங்கிலமாக இன்றைய அரசுகள் ஏற்றுள்ள சூழலில், எதிர்காலத்தில் படைப்பு மொழியாகத் தமிழ் இருக்கும் என நினைக்கிறீர்களா? தமிழ்மொழி வளர்ச்சி குறித்துத் தாங்கள் கூறும் தீர்வுகள் ?!..*

**அருளியார்**: *மழலையர் கல்விமுதல் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கல்வி வரை, பயிற்றுமொழி ஆங்கிலமாகவே இருக்கும் சூழல்,– வேலைவாய்ப்பினையும் பணத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள முறைகேடான மானங்கெட்ட அடிமை மனப்பாங்குச் சூழல் சூழ்வே!*

*மானமும் அறிவும் மண்நலமும் கொண்ட அரசியலார் ஆட்சியில் அமர்ந்துகொண்டு தமிழில் படித்தோர்க்கு மட்டுமே வேலைவாய்ப்பில் முன்னுரிமை என நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிடுவராயின், அதற்கும் மறுநாளே தமிழகத்திலுள்ள அனைத்துத் தன்நல மண்வெட்டியரும் தமிழ்ப்பள்ளிகளை நோக்கித் தத்தம் குழந்தை – குட்டிகளை விரைந்து ஓட்டிக்கொண்டு சூழ்ந்து முற்றுகையிடவும், வரிசையில் முண்டியடிக்கவும் தொடங்குவர்!..*

******

# சீ!... சீசீ!... சீச்சீ!... > சிச்சீ!...

நம் உடல்கொண்டுள்ள உயிரின் குணங்கள், முப்பத்திரண்டு எனும் எண்ணிக்கையது என்கின்றது, நன்னூலின் ஒரு நூற்பா! (நன் : உரி: 432) "அறிவருளாசை.... எனத் தொடக்கமுற்று – உடல்கொள் உயிர்க்குணம்" என அப் பா இறுகின்றது!... அம் முப்பத்திரண்டனுள் "வெறுப்பு" எனப்பெறும் குணப்பகுதிக்குட்படுவதுவே, இந்தச் "சீ" எனும் வெறுப்பு வெளிப்பாட்டுச் சொல்லாட்சி! சொல், எறிவு! மொழிவுவழி, – எரிவு! தீப்பொறியொன்றன் தெறிப்பு போலும் ஓர் எரிவீச்சு!...

"சீ" – என்பது ஒரு சொல்! இவ் வகைச் சொல்அமைவை "ஓரெழுத்து ஒருமொழி " என்னும், நம் தமிழ் இலக்கண மரபு! இதன் படிவங்களில் உள்ளடங்குவனவாகிய 42 சொற்களைப் பட்டியலிடுகின்றது, நம் நன்னூல்! (நன் : 129). மேலும், – பலவாகப் பிறவுமுள! (எவையெவையென, எதிரதாய் வரவுள்ள என் நூல்களுள் ஒன்றனுள் அவை வரையுறுவனவாகும்!)

"இய்" பிரிவு (பிளவு) – வேர். இய் > ஈய் > ஈ = பிரித்துக்கொடு, பகிர்ந்து கொடு. ஈ+தல் > ஈதல். ஈ+கை > ஈகை = கொடை. இய் > இய்கு > இகு > இக = கட (பிரி), கழி. இகு +அல் > இகல் = மாறுபாடு, பகை (பிரிவு). இகவு = அகல், நீங்கு.

இக > இகயு > இகழு (வெறுப்பின் (பகையுணர்வின்) காரணமாகத் தன்னிடமிருந்து பிரிந்துபோ எனும் பொருண்மையில் ஒருவரைத் தாழ்த்திக் குறைத்து அவமதித்துரைக்கும் பயன்பாட்டுச் சொல்லாக, இவ் "இகழ்" எழுந்தது!) இதன் வினைப் பெயர், "இகழ்ச்சி" என்பது! வெறுப்பின் காரணத்தை அகங்கொண்டது, இது! இதன் வேர், "இய்" என்பது!

இய் > ஈய் > சீய் சீய்த்தல் = பிரித்தல், பிளத்தல், கீறுதல், பிறாண்டுதல், கொல்லுதல். (காண்க : சீய் > சீய் + அம் > சீயம் = அரிமா) சீய்த்தல் = இப்படியும் – அப்படியுமாக உகிர்களாற் கீறுதலைப் போன்று துழவுதல் (கருதுக : கோழி குப்பையைச் சீய்க்கிறது!) சீய்த்தல் வினைப் பொருண்மை வழியே, துடைப்பமானது (சீய்மாறு>) "சீமாறு" என்றாயினமை, கருதத்தக்கது! சீய் > சீய்வு > சீவு = வெட்டிப்பிரி (: அவன் தலையைச் சீவினால்தான்,

– இக் கொடுமை அடங்கும்) சீய்ப்பு > சீப்பு = சீய்ப்பது போலும் தலைமயிரினை வாரிச் செப்பஞ்செய்து கொள்ளவுதவுங் கருவி! அதுபோலும் தோற்றப் பொருட்பாடு ஒப்புமை வழியாகவே, வாழைக்குலையின் வரிசைத்தார், வாழைச்சீப்பு என்னப்பெற்றது! அனைத்துக்கும் அடிப்படை, பிளவுதான்!... பிரிவுதான்!... சீய் + அ(ம்) + காய் > சீயங்காய் > சீயக்காய் (soap–pod wattle) தலையழுக்கைச் சீய்த்துத் துப்புரவுப் படுத்தவுதவும் அரைப்புக்குரிய காய், அக் காய்கள் கொண்டு அரைத்தெடுத்த பொடியே, அரைப்பு! அரைப்புத் தூள்! (அரப்பு)

அவ் வகையில்தான் – சீய் > "சீ " என நிறுத்தியொலிக்கப்பெற்றது! சீ > சீசீ சீசீ > சீச்சீ! சீச்சீ, "சிச்சீ " என்றவாறுங் கூட நம் ஔவை வாயால் அழகுற்றது, அச் "சீச்சீ!" (காண்க : நல்வழி : 14:2) "சீ " எனும் வெறுப்பெறிவு எரிசொல், "சை" என்றவாறு நெளிவுறுவதையும் கண்ட, அத் தாயே, "சையெனத் திரியேல்" என்றமையும் ஈண்டு நினையத் தக்கது!

(: தமிழுள் வழங்கும் எவ்வொரு சொல்லும் பொருண்மையடிப் படியிலான வெளிப்பாடே, என்பதனை, – இக் கீற்றும் உணர்த்தவல்லது! "இடுகுறி" என்னும் இலக்கண அரைவேக்காடுகளுக்கு எங்ஙனம் இவையெலாம் புரிவுறும்!... சீ – யெனப் புறக்கணித்துவிட்டு, நாம் – நம் வேலையைப் பார்க்க வேண்டியதுதான்!...)

**– அருளியார்**

**நற்றமிழ்க் கட்டணவிளக்கம்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | உரு. | 20.00 |
| ஆண்டுக்கட்டணம் | உரு. | 240.00 |
| ஐந்தாண்டுக்கட்டணம் | உரு. | 1000.00 |
| வாணாள் கட்டணம் | உரு. | 2500.00 |

(UPI – Unified Payments Interface)

ஒ.செ.ப. ஒருங்கிணை செலுத்தல் பரிமாற்றம்:

பேசி எண் : 89 39 84 59 01 (S. Sejiyane)

பணவிடை செலுத்தவிழைவோர்

இதழ் முகவரிக்கு அனுப்புக!

# "சிச்சீ"– என்பதற்காகும் சின்னஞ்சிறு தெண்ணன் குறிப்பு!...

*(தெள்+நல்+ குறிப்பு)*

*"சிச்சீ"–, என,– இச் சொல்லாட்சி உட்கொண்டிலங்கும் அருங்காட்சி,– நம் பின்றைய ஔவையருள் ஒருவராகிய "நல்வழி" – யாத்த ஔவைப் பாட்டியின் பாட்டொன்றனுள்ளாகப் பட்டொளிறும் ஒலிக்கேட்சி!...*

*"சிச்சீ!..." என நிற்கும் எழிலேழ்ந்த தொடர்ச்சொல்லாட்சி, (சீ+ச்+சீ >) சீச்சீ என்பதன் நெடுமுதற் குறுக்கம்!...*

*இந் நல்வழி வெண்பாவுள் – முந்தியவாகி நிற்கும், ஈரடிகளினுள்ளாகப் – 'பிச்சை' யென்றும், 'இச்சை' யென்றும் பதிவெய்தியுள்ள சொற்களூடாக அமைந்திசைக்கும் எதுகை நலத்துக்கேற்ப ஒத்தியையத்தக்கதாக வரவேண்டிய தனிச்சொல்லாம் "சீச்சீ" எனும் ஒழுங்கிறுக்க முறையாட்சியைச் "சிச்சீ " என முற்குறுக்கிப் பதித்தமை,– தனீஇ அழகினது!...*

**பாட்டியின் பாட்டிது!...**

*"பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்*
*இச்சைபல சொல்லி இடித்துண்கை – சிச்சீ*
*வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது*
*உயிர் விடுகை சால வுறும்"* *(நல்வழி : 14)*

*பொருளுரை:*

*"சால்பு" என்று சொல்லப்பெறும் பண்பாட்டுத் தகைமையொடு பெருமை வாய்ந்திலங்கும் நம் குடிவாழ்வின் இயங்குநிலை பற்றி உரையாடுகையின் போது – நல்குரவாலுறும் இரத்தலென்னும் இழிசெயலாற்றுகையில் – ஈவோரின் மனம் மகிழ்வதற்கென வேண்டி விருப்பேற்றப் போலியுரைகளை முற்பட மொழிந்து – அவர் இழித்துரைத்திடித்தபின் ஈயப் பெறுவதாகிய அவ் விழிவுணவினை வெட்கமின்றி உட்கொண்டு வயிறு வளர்க்கும் கீழ்மையை விடத் – தன்மானம் அழிவதற்கும் முன்னீடாக அந் நேரத்தேயே உயிரை விட்டுச் சாவது என்பது, மிகப்பெரும் பெருமிதத் தகுதியின்பாற்படுவதாகும்!...*

*(: "மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால் – பிச்சைக்கு (–என) இச்சைபல சொல்லி, (அவரால்–) இடித்து (இடிக்கப்பெற்று–) (தாம்–)*

உண்கை, – "சிச்சீ "– (இவ்வாறு–) வயிறு வளர்க்கைக்கு, மானம் அழியாது உயிர் விடுகை சாலவுறும்!" – என்றவாறு, இம் மேற்குறித்துள்ள நல்வழிச் செய்யுளைப் பொருட்பேற்றுக்கு ஏந்தாகப் பிரித்துக் கொண்டு புரிவுறுக!)

**– அருளியார்**

## "கூமுட்டை" எனச் சிதைந்த, – "கூழ்முட்டை!"

***(ஒரு– வகைப் பா!...)***

*மட்டக்கூழ் முட்டையிவ் வடிகட்டி மட்டி!...*
*வட்டிக்கு வாங்கியே கட்டினான் வட்டி!*

***குறுங்குறிப்புகள் :***

*முய் > முல் > மொல் > மல் (சேர்க்கைக் கருத்து– செறிவு– திரட்சி)*
*மல் >மள் > மண் > மண்+ து> மண்டு = செறி, திணி,கூடு, ஒன்று*
*மண்டி = பொருள் செறிவுக் கூடம்*
*மண்டுதல் = திரளுதல் மண்டு + இ > மண்டி = வடிந்து திரண்ட கசடு, படிவெய்திய அழுக்கு.*
*(மண்டியே வலித்து மட்டி ஆகியது!)*
*கூழ் = இளகலாகக் குழைவெய்திய பொருள்; (குழைவான ஊண்பொருள்.)*

*குய்: (நுண்மைக் கருத்து வேர்)*
*குய் > குயு > குழு > குழு + ஐ > குழை = குழைவாகு*
*குழை + உ > குழைவு + இ > குழைவி > குழவி = குழைவிக்கும் அரைப்புக் கல். (கருதுக : " அம்மி" – "குழவி ")*
*அம்மு > அமு > அமுக்கு > அமுக்குதல் = அழுத்தியொடுக்குதல்*
*அம்மு + இ > அம்மி = அமுக்கியரைக்கவுதவும் பட்டடைக்கல்.*
*(பட்டடையே – பட்டறையாகியது!)*
*(அடுப்பங்கடை>அடுப்பங்கறை என்றானது, போல!)*
*குய் > குயு > குழு > கூழு > கூழ் = குழைவுற்றது*
*கூழ்முட்டை = அழுகிக் கூழான முட்டை; (பயன்படுத்தத் தகாதது)*
*(கூழ்முட்டை, – சில கூழ்முட்டைகளின் வாயிலாக (வாய்வழியிலாக) மேலும் – நொய்ந்து – குலைந்து – நலிய நசுக்குற்றுக் கூமுட்டையாகிக் குமுறி நாறுகிறது!)*

"வடிகட்டி மட்டி" என்பது, வடிகட்டியின் சில்லியடைக் குழியுள் படிந்து அடைவுண்டிருக்கும் கசட்டுத் திரட்சியாகிய மண்டி (>மட்டி)

**சில்லியடை:**

இல் = துளை  இல்லி = துளை

(காண்க : "இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை" புறம் : 164 : 4)

இல் > இல் + ல் + இ > இல்லி > சில்லி

சில்லி + அ (ம்) + கோல் > சில்லியக்கோல் > சில்லக்கோல் > சில்லாக்கோல்

: எலி, அணில், உடும்பு, முயல் – போலும் உயிரிகளைத் துளைத்துப் பிடிக்கப் பயன்பெறுவதாகிய இருப்பூசி முளை செருகிய வேட்டைக்கோல்.

சில்லியடை > செல்லியடை > சல்லியடை > சல்லடை

சல்லடை = இடித்தரைத்த தவசப் பொருள்களின் (தானியம்) மாவுத் திரளையைச் சலித்துத் தனிப்பிரிக்கவுதவும் வட்டையுருத் துளைத்தட்டு!

**– அருளியார்**

**நற்றமிழ் இதழ்க்குப் புரப்புக்கட்டணம் வழங்கியோர்:**

| எண் | திருவாளர்கள் | உருவா |
|---|---|---|
| 1. | தமிழ்த்திரு. ம. நடேசன் (நசன்), பொள்ளாச்சி | 3000 |
| 2. | பேராசிரியர் இராம. கோவலன், புதுவை | 1000 |
| 3. | பேராசிரியர் மா. சற்குணம், விழுப்புரம் | 1000 |
| 4. | தமிழ்த்திரு. மருத்துவர் மு. உத்திராபதி, புதுவை | 500 |
| 5. | தமிழ்த்திரு. திருமேனி(ஈசுவரமூர்த்தி), கோவை | 250 |
| 6. | தமிழ்த்திரு. சீனி. செந்தேவன், அனுப்பபட்டி, சூலூர் | 250 |
| 7. | தமிழ்த்திரு. சி. செம்பரிதி, வடவேடம்பட்டி, சூலூர் | 250 |
| 8. | தமிழ்த்திரு. த. பாலு, விழுப்புரம் | 200 |

**புரப்புக்கட்டணம் வழங்கிய நற்றமிழ் அன்புள்ளங்களுக்கு நன்றி!**

# பெயர்ப்பர்க்கொரு பணிந்த வேண்டல்!...

*எவராகிலும் – இவ் வெளியேனின் இக் கருத்துவரியொன்றனை மொழி பெயர்த்துதவவியலுமோ?!...*
*(நாவழுத்தி – நன்றி பொழியக் காத்திருக்கும் முதிஞன்)*

*"பன்கோடியாட்டைகட்கும் முன்னீடே – நேர்ச்சியாலுருத்த ஒற்றைப்புரையனின் எழுச்சிக் கடுத்துப், – பன்மடிமலர்ச்சிகளெய்தி விரிவார்ந்தியன்ற பின்னீடாகச், சின்கோடி ஆண்டுகளாக உயிரிகள் பெற்றமைந்த பட்டறிவு – உய்த்தறிவுச் செய்திகளின் – செயற்பாடுகளின் பதிவுப்படிவுகள் அடர்ந்து செறிந்துள்ள நரப்புவேதியல் சார் – பகுதிப் படிமங்கள் – இக்கால் உயிர்க்கும் மாந்தவுயிரிகள் வரைக்குமாகத் தொடர்மரபுவழியூடே வரிசைப்பாடுற்று – இறுகிய கிடப்பிலாக முற்றிக் கிடக்கின்றமையால் – அவற்றுள் புறத்தினின்று உட்சென்றடங்கிச் செயற்பாட்டிலாக அல்லது செய்தியிலாக உறழ்வார்ந்தவாறு மேன்மேலுமான வினையாண்மை சார்கின்றமையாற் புறம்பெயர்வனவே சிந்தனை விளைவுகளாகி ஒளிர்கின்றனவாதலால் – இன்று இந் நுண்ணொடியுள் என்னென்ன ஒளிர்வடைவுகளோ – அவற்றின் அடிப்படைகளானவை யாவுமே, – மாந்தவுயிரிகளுக்குள் புத்தம்புதியவாகிய மீப் புதுக்கங்களல்ல என்பதையும் – பன்னெடுங்காலமாய்ப் பற்பல படிவுகளூற்று உள்ளுக்குள்ளிருந்தனவே அவை, என்பதையும் – தொல்அடைவினின்று எழுந்திருக்கும் வளர்ச்சிக் குருத்துகள் அவை, என்பதையும், – எவனுக்கும் எவளுக்கும் அல்லது எப் பிறிதுயிரிக்கும் என்னென்னவெலாம் பழைமைப்படிமங்களுக்குள் உள்ளமைந்திருந்தனவோ – அவற்றின் படிமலர்ச்சிகளே – இந் நுண்ணொடியுள் எழுந்து அவ்வவற்றின்பாலாகப் புறத்தே புலப்பெயர்வுறும் படிவுகளும் ஆகும், – என்பதையும் ஆழ்ந்தோர்ந்தறிந்துணரின், இவற்றின் இயங்குநிலையுண்மைகள் யாவற்றையும் நாம் தெற்றெனத் தெளியலாம்!*

**– அருளியார்**

# கன்னிமை கூறிடும் கதையோ?

**– தெசிணியார்**

*நேற்றைய மேனியில் இல்லாத பொன்நிறம்*
*நங்கையை இன்று தழுவுவதும்;*
*காற்றிலே தென்னையின் கீற்றசை வதைப்போல்*
*காட்சிக்கு வளைந்தே ஓடுவதும்;*
*ஊற்றிடை ஊறும்நீர் பாய்ந்திடல் போலெங்கும்*
*ஆடைக்குள் நாணம் பரவுவதும்;*
*சாற்றிடும் பேச்சில்தேன் சொட்டி யினிப்பதும்,*
*கன்னிமை கூறிடுங் கதையோ?*
*காட்டிடைப் பெண்மான் கால்களின் ஓட்டமாய்*
*காமனின் கணையாய் விழியும்,*
*வீட்டிடை யிருந்தும் வாலிபன் முகத்தின்*
*வாளிப்பை அளக்குந் துடிப்பும்,*
*ஏட்டிடை எழுத்தில் தன்னவன் நெஞ்சின்*
*அன்பினில் புரளும் மனமும்,*
*கேட்டிடும் தாயினை நொந்திடும் பாங்கும்*
*கன்னிமை கூறிடுங் கதையோ?.*
*பெற்றவள் கொடியள், தோழியே மேலெனப்*
*பொழுதெலாம் அவன்புகழ் பாடுவதும்,*
*'கொற்றவன் காதலன் கூறிய செய்தியைச்*
*சொல்' என நிலவினைச் சாடுவதும்,*
*முற்றிய கனவினில் நெற்றி வியர்ப்பதும்*
*முத்து வளைகழன் றோடுவதும்,*
*பெற்றவன் குலத்துப் பெண்மையை விளக்கிக்*
*கன்னிமை கூறிடுங் கதையோ?.*

*(முதல் வெளியீடு : (மதுரை) 'தமிழ்நாடு' நாளிதழ் : 1954) அடுத்த வெளியீடு : தெசிணியின் 'இயற்கை –அகத்துறைப் பாடல்கள்' நூல் (2002–திசம்பர்) அதற்கடுத்த வெளியீடு: தெசிணியின் 'பதினொரு பாட்டியல்' நூல் (2002–திசம்பர்)*
*எடுத்துவெளியீடு : தெசிணியின் 'கவிதை' இதழ்சுவடி 6, ஏடு 17 : 15:12:1967)*

# அடிப்படைக் கலைச்சொற் பட்டியல் *(2)*

– செவ்வியன்

*A-bomb* (காண்க: atomic bomb)
*aborigines* தொன்முதுமக்கள், பழங்குடி மக்கள்
*abration* கீறல், தேய்வு
*abridgement* சுருக்கம்
*abscissa* கிடைஅச்சுக் தூரம், கிடைஆயம், மட்டாயம்
*absey* அகரவரிப்பாடு
*absolute address* (துல்லியமான) நினைவக முகவரி
*absolute zero* தனிச்சுழி
*absorption* உறிஞ்சல்
*abutment* உதைமானம்
*AC/AC converter* அ.மி/அ.மி. மாற்றி. (உள்ளீடும் விடுவரலும் அலை– மின்னோட்டமாக இருக்க, அலைவடிவம் மாற்றி)
*Academic* கல்விசார்ந்த
*acapnia* குருதிக் கரிவளிக் குறை
*accelerator* முடுக்கி
*acceptor* ஏலி
*access* அணுகல், வழி
*access denied* அணுகல் மறுக்கப்பட்டது. (உரிய அணுகல் உரிமை இல்லாதபோது காட்டப்படும் செய்தி)
*Accessories* சேர்கருவிகள், துணைக்கருவிகள், சேர்பொருள்கள்
*access Point* அணுகு நிலை. (வலைத்தளம் (அ) இணையத்துடன் கம்பியின்றி இணைப்பதற்கான கம்பியிலாப் பெறுதி) (காண்க: Base station 3.)
*access time* அணுகல் நேரம் 1. கணினி தரவைக் கேட்பதற்கும், தரவு கிடைப்பதற்கும் இடையிலான மொத்தநேரம். 2. கணினியின் நடுவண் செயலாக்க ஒருமத்திற்கு, முதன்மை நினைவகத் தரவைப் படிக்க ஆகும் நேரஅளவு
*Accident* நேர்ச்சி
*AC circuit* அலைமின்னோட்டச் சுற்று. (அ.மி.சுற்று)
*accompaniment* 1.உடன்வரவு 2. துணையிசைக்கருவி 3.பின்பாட்டு

(தொடரும்)

# புதுவைத் தமிழ்நெஞ்சன்

## *என் செந்தமிழ்நெஞ்சன்! எடுத்துக்காட்டன்!*

*விடாப்பிடி, வீறம், வினைவலி, வீம்பு,*
*கடாஅக் களிற்றின் கடுந்திறல், கனிவு,*
*எதற்கெடுத் தாலும் எதிர்வினாத் தொடுத்து*
*முதற்படும் முனைவு, மூண்டெழுங் கோவம்,*
*குழந்தைபோற் பிணங்கிக் கொதித்தெழும் பாங்கு*
*பழந்தமிழ் மொழிஇனம் பசுந்தமிழ் நாடு*
*நலம்பெறற் கென்றே நாடிய கொள்கை,*
*குலம்மதம் கடவுள் குதறிடும் நோக்கு,*
*ஆரியப் பூரிமை நூறிடும் தாக்கு,*
*நேரிய வாழ்வியல் நிலையினில் தோய்வு,*
*தூரிகை அசைப்பினில் வரிப்புலிப் பாய்வு,*
*தேரியபோக்கு, தென்றமிழ் நாக்கு – இவை*
*சேரிய செம்மல்! தமிழ்மொழிக் குட்டியின்*
*சீரிய தந்தை, என்செந்தமிழ் நெஞ்சன்!*
*எடுத்துக் காட்டென இவன்வாழு கின்றான்!*
*அடுத்துஇவன் பாவுரை மடுக்கவா ரீரே!*

**- அருளியார்**

*(**நன்றி : ‘ கட்டைவிரல்’** நூலிற்கான அணிந்துரை–1995)*

---

**மானமும் அறிவும் மாந்தர்க்கு (மனிதர்க்கு) அழகு**

**– தந்தை பெரியார்**

**பகுத்தறிவைப் பயன்படுத்துவதில்லை என்று ஒருவர் முடிவுசெய்த பிறகு, அவரிடம் உறழாடுவது (வாதிடுவது) என்பது செத்துப்போன மாந்தனுக்கு (மனிதனுக்கு) மருந்து ஊட்டுவதற்கு நிகராகும்.**

**– பேரறிஞர் அண்ணா**

# நூல் அறிமுகம்

நூல்: மெய்ம்மை.

ஆசிரியர்: பொறிஞர் அகன்.

வெளியீட்டாளர்: தமிழரண் பாவாணர் மன்றம்
சீனிவயல், கீரனூர் – 622502.,
புதுக்கோட்டை மாவட்டம்.

பொறிஞர் அகன், திறமிக்க பாவலராவார். தூயதமிழில் இவர் எழுதிய மரபுப் பாடல்களைப் பலரும் 'தெளிதமிழ்', 'நற்றமிழ்' இதழ்களில் படித்திருக்கக் கூடும். சிறுகதைகளும் எழுதியிருக்கின்றார். 'மெய்ம்மை' நூலின் வழி, தமிழர்க்கு ஊக்கமும் எழுச்சியும் தரும் கருத்துகளைத் தருகின்றார்.

மொழிஞாயிறு பாவாணர், வெங்காலூர் குணா முதலிய பல அறிஞர்களின் கருத்துகளைத் தாம் சொல்லும் கருத்துக்கு வலுவூட்ட தொகுத்தளித்திருக்கின்றார். அவற்றுள் பெரும்பாலானவற்றை அவ்வறிஞர் தம் கருத்துகளாக மேற்கோளில் காட்டியுள்ளார்.

நூலில் தமிழின், தமிழரின் வீழ்ச்சி பற்றியும் நூலின் இறுதியில் மீட்சி வினைப்பாட்டிற்கு எழுச்சியும் ஊக்கமும் அளித்து எழுதியுள்ளார். நூல் ஏழு இயல்களைக் கொண்டுள்ளது. முதல் இயலில் குமரிநாடே முதல் மாந்தனின் தாயகம் என்னும் பாவாணரின் கருத்தை எடுத்துக்காட்டி எழுதுகின்றார். இரண்டாம் இயலில் குணா எழுதிய விழுவன்கோல் பற்றிக் கூறுகிறார். அவருக்குரிய ஆய்வின்வழி சங்கம் தமிழ்ச்சொல் என்று கூறுகிறார். தானே ஒளிர்வது நாள்மீன் என்றும் தானே ஒளிராதது கோள்மீன் என்றும் கூறுகிறார். வெட்டப்பட்டது வேட்டி, துண்டிக்கப்பட்டது துண்டு என்ற விளக்கங்களிருக்க, இவர், சுற்றி வளைத்துக் கட்டுவது வேட்டி என்றும் தோளின்மீது அணியும் ஆடை துண்டு என்றும் கூறுகிறார். தமிழாண்டுத் தொடக்கம் சித்திரை மாதம் என்றும், மேழ (சித்திரை) மாதத்தைக் குறிக்கும் ஆடு, ஆண்டு ஆனதென்றும் எழுதுகின்றார்.

மூன்றாம் இயலில் உடல் உயிர் பற்றி அறிஞர் க.நெடுஞ்செழியனார் கருத்தை எழுதுகின்றார். எண்ணியம் சாங்கியம் பற்றிக் குணாவின் கருத்தைக் கூறுகின்றார். நான்காம் இயலிலும், நூல் முழுமையிலும் அவர் திரும்பதிரும்பக் கூறும் கருத்து எழுமை பற்றியதாகும். ஏழு என்ற எண்ணிக்கையில் நிலைத்திணை, காற்று, ஒலி,

இசை, மாந்தர் வாழ்வு, தமிழ் முதலிய பலவற்றின் நிலைகளைப் பொருத்திக் காட்டுகிறார்.

ஐந்தாம் இயலில் இவர் திருக்குறள் பற்றிய பல செய்திகளுடன் நான்கு குறள்களுக்குப் பாட வேறுபாடுகள் கூறுகிறார். குறளில் அயற்சொல் ஒன்றுகூட இல்லை என்னும் இரா.இளங்குமரனார் கருத்தைக் கூறுகிறார். ஆறாம் இயலில், தொல்காப்பியத்தில் இடைச்செருகல்கள் உள்ளன என்பதுடன் தொல்காப்பியம் பற்றிய பல செய்திகளைக் கூறுகிறார். அயற்சொற் கலப்பு ஒருபோதும் தமிழுக்குச் சிறப்பைச் சேர்க்காது என்கிறார். மாக்சுமுல்லர் வாழ்வின் இறுதிக் காலத்தில் எழுதிய நாட்குறிப்புச் செய்திக்கு அடிப்படைச் சான்று தராததால் நம்பகத் தன்மையற்றதாகி விடுகின்றது.

ஏழாம் இயலில் பண்டைக் குமரிக்கண்டத் தமிழரே உலகெங்கும் பரவினர் என்னும் இவர் கூற்றிற்கு அடிப்படைச் சான்று ஏதும் தரவில்லை. மோரியருக்குக் கூலிப்படையாக இருந்த வடுகரே தங்களை ஆரியர் எனக் கூறிக்கொண்டனர் என்னும் அறிஞர் குணாவின் கருத்தை எடுத்துக்காட்டும் இவர் அதற்கான சான்று ஏதும் குறிப்படவில்லை.

நூல் முழுவதும் சொல்லாய்வுகள் பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால், இரு+அயில் = இரயில் என்றும் இருதயம் தமிழென்றும், விண்+ஞாலம் = விஞ்ஞானம் ஆனது என்றும் இன்னும் இவை போன்ற இவர் சொல்லாய்வுகளும், திருவள்ளுவர் காலம் கி.மு 10000, தொல்காப்பியர் காலம் கி.மு. 8000 என்ற அடிப்படைச் சான்றுகளற்ற கூற்றுகளும், கழிபொருநையே கலிபோர்னியா போலும் கூற்றுகளும் இவைபோன்ற பிறவும் வெறும்வாயை மென்று கொண்டிருக்கும் தமிழ் வெறுப்பாளர்க்கு அவலளிக்கும் தன்மையவாம்.

இவையிருக்க, இந்நூல், தமிழ்மொழி, தமிழர் வரலாறு சார்ந்த மெய்ம்மைகளை எளிமையான அழகான தூய தமிழில் பாடநூலைப்போல் தருகின்றது. இரண்டகர்களைச் சீறி இனங்காட்டுகின்றது. தமிழரின் எழுச்சிக்கு வழிசெய்கின்றது.

**– மெய்ம்மிழற்றி**

## தேவை!

**‘செஞ்சொற்கதிரவன்’ பேராசிரியர் அருளியார் அவர்களால் உருவாக்கப்பெற்று வருகின்ற செந்தமிழ்அகராதிப் பணிகளுக்காகத் தமிழறிஞர்கள், சான்றோர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் ஆகியோரின் உறுதுணையும் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றன.**

**தமிழ்மொழி வளர்ச்சிக்குத் துணைதர விரும்புவோர், தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

**“வேரியம்”,**
**வேரியல் ஆராய்ச்சி நிறுவனம், தமிழூர்,**
**32–அ, புலவர் வீதி விரிவு, திலாசுப்பேட்டை,**
**புதுச்சேரி – 605 009 பேசி : 70 10 58 42 12**

## Wanted!

**We seek Scholars, Professors, Erudite Persons, and Research Students etc. to render their services for proof– reading in creation of the "Original Origins" (volumes of books) – An Etymological, intense survey on English and other Allied languages, (acute and exploratory discoveries through Linguistic Science) by Scholastic Researcher and Professor Aruliyar.**

**Contact :**
**VERIYAM,**
**Etymological Research Institute – ERI,**
**32–A, Pulavar Street Extn.,**
**Thamizhoor, Thilasuppettai, Puducherry – 605 009**
**Mobile : 70 10 58 42 12.**

# கணக்கில்,–நான் ஒரு “சுழியன்”! அதுவாவது, பாழானவன்!

**– அருளியார்**

*என் தொழில் "வேர்ச்சொல் ஆய்வியல்" எனினும்,– "கணக்கு" எனும் அருந்துறை, எனக்குச் சிறுபிள்ளையினின்றே படிக்கவே பிடிக்காத ஒரு கடுந்துறை!... கணக்கில், – நான் ஒரு தவளை!... நடக்கவோ – ஓடவோ இயலாமலேயே – தாவித்தாவி தன் எல்லையடைகின்ற, அத் தவளை போலவே – அறிவுலகத்தில் நானும் இக் கணக்கியல் எல்லையைப் பிசகாது எப்படியோ கடந்து வந்து விட்டேன்!... எனக்கே வியப்பு!...*

*எண்சார் வாய்பாட்டினை வரப்படுத்திக் கொள்ளாத – மனனம் செய்து உள்ளுள் படிவித்துக் கொள்ளாத – ஒருப்படுமாறு நெட்டுருப்படுத்தி நினைவுள் அகப்படுத்திக் கொள்ளாத – எவருக்கும், கணக்கு என்றாலே கசக்கத்தான் செய்யும்!... கணக்கியல் எனுந்துறை, எனக்குப் பிடிக்காமலும் பிடிபடாதும் போனதற்கு அடிப்படை, – எண்சார் வாய்பாட்டினை என் கழியிளம்பருவக் கல்விக்காலத்திலேயே உட்கொள்ளாது தவிர்த்த சூழலே, கருக்காரணமாகும்!...*

*கணக்கில் மந்தமாயிருப்பான் ஒருவன், – தன் வாழ்க்கைக்கான ஓடுபாதையில் – கைவீசி நடக்கவோ, கால் தாண்டியோடவோ இயலாதவனாய் – அவ் வழியெல்லாந் தடுமாறித் தடுமாறி, தடுக்குற்றுத் தறிகெட்டு – நொந்துநூலாகி – நொடிந்து நொம்பலப்பட்டுத் தவழ்ந்தவாறே ஊர்ந்து நெளிந்து கிடந்துழலுவான்! கணக்கறிவு இல்லையேல், வாழ்வு விரைவுறாது; நிறைவுறாது; வலம் (வலி) பெறாது! வளமும் வாயாது! அதனைத் தாண்டி ஒருவன் மேற்செல்லுவது என்பது, அரிதினும் அரிது! கழியிளமையில் வாய்பாட்டினைச் சரிவரக் கல்லாத நான், ஓர் அறுபான் ஆண்டுக் காலத்திற்கும் மேலாகப் பட்டபாடும் – கெட்டகேடும் – உற்றதுயரும் – அளவற்றன! காட்சிக்குட்படும் எண் வாய்பாட்டுத் தாள்களும் – கணக்கியல்சார் செயலிகள் கொண்ட ஊடகங்களும் என் போன்றோரைத் தப்பிப் பிழைத்துத் தலைநிமிரச் செய்துள்ளன!*

*******

# தமிழ் உரிமை இயக்கத்தின் போராட்டம் வெல்க!

*வாணிகர், தம் முகவரியை வரைகின்ற பலகையில்*
*ஆங்கிலமா வேண்டும்?*
*"மாணுயர்ந்த செந்தமிழால் வரைக" என அன்னவர்க்குச்*
*சொல்ல வேண்டும்!*
*. . . . .*
*மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை?*
*தோப்பில் நிழலா இல்லை?*
*தணிப்பரிதாம் துன்பமிது!*
*தமிழகத்தின் தமிழ்த்தெருவில் தமிழ்தா னில்லை!*

*என்றவாறு,* ***'தமிழியக்கத்தில்'*** **பாவேந்தர்** *வருந்திப் பாடிய நிலையை மாற்ற,* **புதுச்சேரி கடைகள் மற்றும் வணிகநிறுவனங்களின் சட்டம் – *1964*, புதுச்சேரி அரசின் ஆணைகள்** *(1969, 1971, 1986 மற்றும் 1989), 18.03.2025* அன்று சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் புதுச்சேரி மாநில முதல்வரின் அறிவிப்பு ஆகியவற்றின்படி **தமிழில் அமைக்கப்படாத கடைகள் – நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் அகற்றும் போராட்டம்**, புதுச்சேரித் தமிழ் உரிமை இயக்கத்தாரால் *11.09.2025*இல் சிறப்புடன் நடத்தப்பெற்றது. இப் போராட்டம் மேலும் பெருவெற்றி பெறவும், புதுச்சேரித் தெருக்களில் தமிழ்ப்பெயர்கள் ஒளிரவும் நற்றமிழ் வாழ்த்துகின்றது!

***தமிழால் ஒன்றிணைவோம்!***
***தாய்த்தமிழைப் பாதுகாப்போம்!***

*(குறிப்பு: இத் தமிழ் மீட்புப்போராட்டத்தினை இழிவுபடுத்தி அவதூறு செய்தி வெளியிட்ட தினமல(ர்) இதழினை நற்றமிழ் கண்டிக்கிறது!)*

*****

***கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்***
***பெருமையின் பீடுடையது இல். திருக்குறள் – 1021***

# நற்றமிழ்க்கு வந்த நன்மடல்கள்

*41. பேரன்பு கெழுமிய பாவலர்மணி தமிழநம்பி அவர்களுக்கு, வணக்கம்.*

*நற்றமிழின் அட்டைப் பக்கத்தில் பெருமதிப்பிற்குரிய நம் தமிழ்மாமணி புலவர் இறைவிழியனார் அவர்களின் உருவச் சிலை உயிர்ப்புடன் நேரில் காண்பது போன்று முறுவலித்து தோற்றமளிக்கின்றது. பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்த அவரின் தொண்டினைத் தொடர்ந்து போற்றி வரும் தங்களின் செயற்பாடு போற்றத்தக்கது.*

*இதழில் நம் வேர்ச்சொல் ஆய்வு வேந்தர் அருளியாரின் கட்டுரைகள் ஈர்த்து நிற்கின்றன. 'கன்னியும் குமரியும்' பற்றிய அருளியாரின் கட்டுரையில், பரிபாடலை மேற்கோள் காட்டி 'கன்னிமை' என்னும் சொல்லைப் பற்றி அவர் எழுதியிருந்ததைப் படித்ததும் 71 (எழுபானோர்) ஆண்டுகளுக்கு முன், (1954 என்று நினைவு ) அப்போது மதுரையில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த 'தமிழ்நாடு' என்னும் நல்லதமிழ் நாளேட்டில் எளியேன் 'கன்னிமைப்' பருவத்தைப் பற்றி எழுதியிருந்த பாடல் என் நினைவில் எழுந்தது. பழைய பாத் தொகுப்புகளைத் தேடி எடுத்து அப்பாடலைப் படியெடுத்து எழுதி, அனுப்பியுள்ளேன். (71 ஆண்டுகள் ஓடி விட்டன. )*

*நற்றமிழ் இதழ் முழுவதும் நம் அருளியாரின் பாடல்கள் விரவி நெஞ்சையள்ளுகின்றன. அவரின் 'அறிவார் யாரோ!' பாடல் மிகவும் அருமையாக உள்ளது. அதிலும் இறுதிப் பகுதியில், 'தடுப்பார் யாரோ?' என்று மிகுந்த நம்பிக்கையோடு முடித்துள்ளார். வருங்காலத்தில்தான் இவற்றிற்கெல்லாம் மதிப்பு, மிகவும்!! 1979 லேயே எழுதப்பட்ட இப் பாடல் அருளியாரின் பாத்திறமையைப் பறைசாற்றி நிற்கின்றது.*

*"அறிவார்"என்னும் சொல், "அறியார்" என்ற சொல்லாக மாற்றப்பட வேண்டும். இது நடக்கும்! கட்டாயம்!*

*கீழடி ஆய்வு பற்றிய கட்டுரை, விளக்கங்கள் நிறைந்து தெளிவு ஊட்டுகின்றது. நம் தமிழநம்பியின் நீண்ட கட்டுரை பரப்பப்பட வேண்டும். அச்சிட்டுப் பரப்பிட வேண்டுகின்றேன்.*

*நம் இறைவிழியனார் நினைவு நூலகத்திற்காக என் நூல்களில் சிலவற்றைத் தனியாக எடுத்து வைத்துள்ளேன். சென்னைக்கு*

எவரேனும் வர அமையுமானால், அவர்களிடம் நூல்களைக் கொடுத்தனுப்புவேன்.

**மூதறிஞர் தெசிணியார், சென்னை**

*(மூதறிஞர் தெசிணியார் அவர்களிடமிருந்து 'நற்றமிழ்' நிறுவிய தமிழ்மாமணி புலவர் மு. இறைவிழியனார் நினைவு நூலகத்திற்கு நூல்கள் நன்றியுடன் பெற்றுக்கொள்ளப்பட்டன.)*

42. இன்பத் தமிழ் மறவர்களே! ஒன்று சேருங்கள்! இன்பத்தமிழைக் காக்க வாரீர்! இன்றமிழ் காக்க எழுங்கள்!_ ஒன்று சேருங்கள்! இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!

**பாவலர் அறிவழகன் க.மு., கல்.மு. சின்னசேலம்**
**கள்ளக்குறிச்சி மாவட்டம்**

43. நற்றமிழ் முன் அட்டையில் சிலையாகி நின்றிடும் மு. இறைவிழியனாரின் அரிய தமிழ்ப்பணிகள் என் நெஞ்சில் வடுவில்லா ஆழமான நினைவலைகளை எழுப்பியது. குளித்தலை இளமுருகு – பொற்செல்வி இணையர் நடத்திய கா.சு.பிள்ளை நினைவு இலக்கியக் குழு ஆண்டு விழாவில் அவர் ஆற்றிய உரையெல்லாம் நீங்காமல் நெஞ்சில் நிழலாடுகிறது. தமிழுக்கு ஆக்கம் செய்திட ஆள்வோர்க்கு அருளியார் விடும் அழைப்பு பொருள் புரிந்தது. உள்ளத்தில் உறுதியாகக் கொள்ள வேண்டியது, பேரறிஞர் அண்ணா கொண்டு வந்த இருமொழிக் கொள்கைதான், (தமிழும் ஆங்கிலமும்) தமிழக மாணவர்களுக்கு ஏற்ற கொள்கை.

**திருக்குறள் தூயர் இராம. கோவிந்தன், தென்னிலை.**

44. பேரன்பு சால் ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

வேங்கைமான் ஒளியவன் வேள் பிரபாகரன் ஈழத்தை ஆண்டதைப், பன்னாட்டுச் சூழ்ச்சியால் தமிழீழ மக்களுடன் மாண்டதை, நம் கண்களில் நீர் தளும்ப எடுத்தியம்பி தமிழ் ஆட்சியங்கொரு நாள் மீட்சி பெறும் என அருளியார் கணித்துக் கூறியிருப்பது உளத் தென்புக்குரிய செய்தியாய்,மிளிர்ந்தது.

"கிழி", "கை" எனும் சொற்களுக்கான அருளியாரின் அரிய விளக்கம் திகைப்பூட்டித் திணறவும் வைத்தது.

**அறிவுத்தொகையன், திருலோக்கி**

*45. அன்பரீர்! வணக்கம். ஆசிரியர் உரையும் அருளியார் இயற்றமிழும் அருமையாக உள. ஐயா இறைவிழியனார் காலத்திருந்தது போல படிக்குநர்க்கு ஆர்வத்தை ஊட்டவும், அறிவைப் பெருக்கவும் தலைப்பும் பாவகையும் கூறி, மரபுப்பாக்களை எழுதத் தூண்டலாம். சிறுவர்களுக்குத் தமிழ் அறிவையும் தமிழ்ப் பற்றையும் வளர்க்கச், சிறார் பகுதியைத் தொடங்கலாம். வாய்ப்புக்கும் சூழலுக்குமேற்பச் செயற்படுக. இதழ் மேலும் சிறக்க வாழ்த்துகள். அன்பனேன்,*

**புலவர் பெ. சயராமன், [சிலம்பூர்கிழான்] த.நா.அரசு தமிழ்ச் செம்மல் விருதாளர், கல்லக்குறிச்சி.**

*46. பெருமதிப்பிற்குரிய நற்றமிழ் ஐயா, வணக்கம்.*
*"அகத்தியர் புரட்டு" ஆய்வின் உச்சம்! முதன்மையாகக் கற்றிடவேற்றது அக் கட்டுரை. இது, தனி சிறு நூலாக வெளியிடப்பெற்றால் அஃதோர் சிறந்த ஆவணமாகும். "பெயர் பற்றி ஒரு அறை" அருளியார் ஆய்வு மானவுணர்வோடு கற்க வேண்டியது!*
*அண்ணார் அருளியாரோடே, நான் நேரில் விளக்கமாகக் கேட்டிருக்கின்றேன். மகிழ்ச்சியும் நன்றியும்.*

**பாவலர் இரா. வேலாயுதம், சேலியமேடு, புதுச்சேரி.**

## 'மறைந்து வரும் தமிழ்ச்சொற்கள்'!

***சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை***
***ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த***
***பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனால்***
***நைந்த தமிழர் நலிவு பலகோடி!***
***இன்று விழித்தோம், இனியேனும் செந்தமிழை***
***நன்றாகப் பேணிவர நாம்முனைவோம்! நாற்புறமும்***
***சென்று மறைந்துவரும் செந்தமிழ்சேர் சொற்களை***
***ஒன்றுதிரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி***
***இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்றம் பயின்றிடுக,***
***செப்பம் மொழிக்குச் சிறப்பு!***

**பாவலரேறு பெருஞ்சித்திரனார் – 1966**

## ஞாயமாடா, நாய்களே?!...

*காதலன்பு பற்று மற்றும் ஆசையென்னும் யாவுமே*
*தோதுலாவும் தூயநெஞ்சத் துயிர்களிந்த உலகிலே*
*தீதிலாத வாழ்வுக்கான தித்திப்பாரும் கூறுகள்!*
*ஏதுங்கள்ளங் கரவிலாதிவ் வுயிர்கள்தம்முள் ஒன்றினே*
*சூதுமானக் கூனளாவிக் கோணிச்சாதிக் கென்னவோ*
*தீதுவந்து சூழ்ந்ததென்று அறிவுசிறிது மின்றியே –*
*கோதிலாது கோத்துவாழச் சேர்ந்திணைந்த சேய்களைச்*
*சாதிசொல்லி வெட்டிமாய்க்கும் நாய்கள்ஞாய முணருமோ!...*

**– அருளியார்**

**(நன்றி : தென்மொழி – ஆகத்து 2025)**

---

## ஏங்கும் என் நெஞ்சம்!...(ஏங்குமென்னெஞ்சம்!...)

*வன்கொடுங் கெடும்புவாய் வளைந்தகூன் மனத்தொடும்*
*அன்பகன்றும் நயனகன்றும் அறிவும்நைந்த மூளையில்*
*ஒன்றுமற்ற மட்டிமூட மடவப்பித்த ஞமலியர் –*
*தொன்றுதொட்டு நேயந்தோய்ந்த தொந்தங்கொண்ட உறவர்–தாம்*
*ஒன்றுதற்கிங் கூறுசெய்த ழித்துமாய்க்குந் தீர்வொடு*
*இன்றுமுந்தி வந்திழித்து வம்புமூட்டும் தீம்புக்கிங்*
*கென்றுதம்மைத் திருத்திக்கொண்டு குரைப்பொழிந்த டங்குவர்*
*என்றென்னெஞ்சங் குமுறிவெந்து கூடும்நாட்கிங் கேங்குமே!...*

**– அருளியார்**

**அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்**
**ஆற்றுவார் மேற்றே பொறை.** **திருக்குறள் – *1027***